REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 11 விலை - ரூபா 20 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :132 பங்குனி 24ஆம் நாள் திங்கட்கிழமை 06 ஏப்ரல் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# நிலைமை மோசமாகிறது மக்களே அவதானம்!!

*எச்சரிக்கின்றார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்*

கொழும்பு, ஏப்ரல் 6

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த இறுக்கமான துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், அதையும் மீறி அது பரவுகின்றது. நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து நாடு மோசமான நிலைமைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. 02 ➤

## தாதியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 6

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் இன்றுமேற்கொள்ளவிருந்த அடையாளப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுடன் நேற்று நடத்திய பேச்சுக்களில் சாதகமான முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளதால், போராட்டத்தை கைவிடுவதாக அரச தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று பாதுகாப்பு அங்கிகள் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாதியர் சங்கம் அரசு 02 ➤

## யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து ஊரடங்கு

*வீட்டில் இருந்து பணிபுரியும் காலமும் ஏப்ரல் 10 வரை நீடிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணம் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் இன்று தளர்த்தப்படாது. மறு அறிவித்தல் வரையில் தொடர்ந்து இருக்கும். ஏனைய 19 மாவட்டங்களில் இன்று காலை 6 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச்சட்டம் மீண்டும் 2 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் இவ்வாறு ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்ட மற்றும் 02 ➤

## யாழிலிருந்து வெளிச்செல்வதாயின் மருத்துவ பரிசோதனை கட்டாயம்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதாயின் மருத்துவ பரிசோதனை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வடக்கின் 02 ➤

## கொரோனா 176

நான்கரை வயது சிறுவன் உட்பட 10 பேருக்கு நேற்று மட்டும் தொற்று!

கொழும்பு, ஏப்ரல் 6

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. நேற்றுப் புதிதாக 10 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 02 ➤

## பொதுத் தேர்தல் கட்டம் கட்டமாக!

*அரசு தீவிர ஆலோசனை ஏப்ரல் 26இல் வர்த்தமானி*

யாழ்ப்பாணம், ஏப்ரல்.6

நாடாளுமன்றத் தேர்தலை எப்பாடுபட்டாவது நடத்தி முடிப்பதில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தீவிரமாக உள்ளார். தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை கட்டம் கட்டமாக நடத்துவது தொடர்பில் ஆலோசனை நட 02 ➤



முச்சந்தி முரளி

"கொரோனா பிடிக்கும் கவனம் எண்டு சொன்ன பிறகும் வீட்டுக்க இருக்க முடியாமல் இப்பிடி உலாத்தினா உதுதான் கதி கண்டியளோ"

## வீதியில் தவழ்ந்த விடுப்புக்காரர்கள்

*சாவகச்சேரியில் தண்டனை*

தென்மராட்சி,ஏப்.6

ஊரடங்கு வேளையில் ஊர் சுற்றிப் பார்க்கச் சென்றவர்கள் படையினரால் வீதியில் தவழ வைக்கப்பட்டனர். இந்தச் சம்பவம்சாவகச்சேரி நகரப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. 02 ➤

## ஊரடங்கை மீறிய 14,268 பேர் கைது

கொழும்பு, ஏப்ரல் 6

ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 14 ஆயிரத்து 268 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட 02 ➤



கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிவதற்கான பரிசோதனைகள் யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் ஆரம்பமாகின. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இதற்கான பரிசோதனைகள் உரிய பாதுகாப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன. (ஒ,5)

## தெல்லிப்பழை துர்க்கையம்மனில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு



தெல்லிப்பழை, ஏப்.6

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் 02 ➤

## கொரோனா எவருக்கும் இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்ப்பாணத்தில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் மற்றும் கொரோனா சந்தேகத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு கொரோனா இல்லை 02 ➤



செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க...

செய்தி
077 316 5555
076 584 2222
021 493 0000

விளம்பரம்
071 618 2182
077 959 2628
021 493 1111

## நிலைமை...

எதிர்வரும் நாள்கள் இன்னும் மோசமானதாக இருக்கக்கூடும். இலங்கையில் நிலைமை தொடர்பில் எந்தவொரு எதிர்வு கூறலையும் இப்போது வெளியிடமுடியாது. மக்கள் வீடுகளுக்குள் இருப்பதே பாதுகாப்பான ஒரே வழி இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப்போது வரையிலும் இலங்கையில் கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமைகளை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடிந்துள்ளது. ஆனால், நாளாந்தம் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இந்த நிலைமையில் அடுத்த ஒருவார காலம் மிகவும் கடினமான மோசமான வாரமாக அமையும்.

நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறு இருக்கையில் எதிர்வரும் புத்தாண்டு வரையில் மிகக் கடினமான சுகாதாரச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இறுக்கமான சட்ட திட்டங்களைப் பிறப்பித்து மக்களைக் கட்டுப்படுத்தி தொற்று நீக்கல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே இலங்கையின் நிலைமை என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும். எனினும் புத்தாண்டு காலம் வரையில் சரியான எதிர்வுகூறல் ஒன்றை முன்வைப்பது கடினமானது.

இப்போது நாட்டில் எவ்வாறான சட்ட திட்டங்களைப் பிறப்பித்து கட்டுப்பாடுகளை விதித்து நிலைமைகளைக் கட்டுப்படுத்த அரசு மற்றும் சுகாதாரத்துறை செயற்படுகின்றதோ அதே நடைமுறைகளை தமிழ் சிங்களப் புத்தாண்டு வரையில் அல்லது அதற்குப் பின்னரும் சில நாள்களுக்குக் கடைப்பிடிக்க வேண்டும்.

இப்போது வரையில் முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மக்கள் எக்காரணம் கொண்டும் நடமாட வேண்டாம். அத்துடன் இந்தப் பகுதிகளில் தொற்று நோயாளர் இனங்காணப்படும் பட்சத்தில் உடனடியாக அவர்களை முகாம்களுக்குக் கொண்டு செல்லும் வகையில் ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் வீடுகளில் இருக்கும் நபர்களுக்கு இந்த நோய் அடையாளம் இருப்பின் 1390 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும். மூன்று மொழிகளிலும் மருத்துவர்கள் தொடர்புகளை ஏற்படுத்துவார்கள். மருத்துவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான முறையில் பதில் தெரிவித்து தமது பாதுகாப்பை மக்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். (ஒ,5,22)

## தாதியர்களின்...

டன் பேச்சு நடத்தியிருந்தது. முதல் இரண்டு சுற்றுப் பேச்சுக்களிலும் சாதகமான முடிவு கிடைக்கப் பெறாததையடுத்து இன்று ஒரு மணி நேரம் அடையாளப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்திருந்தது.

இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற பேச்சில் சாதகமான முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. (ஒ,5)

## யாழ்ப்பாணத்தில்...

தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் பகுதி பகுதியாக ஊரடங்குச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துடன் ஆலோசிக்கப்பட்டபோதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மற்றும் புத்தளம் ஆகிய 6 மாவட்டங்களுக்கான பொலிஸ் ஊரடங்குச்சட்டம் மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். ஏனைய 19 மாவட்டங்களுக்கான ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிக்கு தற்காலிகமாக தளர்த்தப்படும். அதன்பின்னர் பிற்பகல் 2 மணி முதல் மீண்டும் ஊரடங்கு நடைமுறைக்குவரும்.

அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள நடைமுறையை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயம், ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு தமது வேலைகளை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் அட்டுலுகம மற்றும் கண்டி மாவட்டத்தின் அக்குரணை ஆகிய பகுதிகள் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு பகுதிகளுக்கும் செல்வது தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏப்ரல் 6 முதல் 10 வரை வீட்டில் இருந்து பணி புரியும் வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் துறையினருக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது, என்றுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் பகுதி பகுதியாக ஊரடங்கைத் தளர்த்துவதற்கு முதலில் ஆலோசிக்கப்பட்டிருந்தது. தீவகத்தில் குறிப்பிட்டளவு நேரம், வடமராட்சியில் பிறிதொரு நேரம், வலிகாமத்தில் வேறொரு நேரமாக, ஊரடங்கைத் தளர்த்துவது தொடர்பில் ஜனாதிபதி செயலணியினர், யாழ்ப்பாண மாவட்டச் செயலக உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்தியிருந்தமைகுறிப்பிடத்தக்கது. ஆயினும் அந்த ஆலோசனை பின்னர் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை. (ஒ,5,44)

## கொரோனா...

நீர்கொழும்புப் பகுதியிலிருந்து நான்கரை வயது சிறுவன் ஒருவரும், புத்தளம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டவர்களில் நால்வரும், கொழும்பிலிருந்து மூவரும், மாத்தறையிலிருந்து ஒருவரும், நேற்றுப் பின்னிரவில் ஒருவரும் புதிய தொற்றாளர்களாக நேற்று இனங்காணப்பட்டுள்ளனர். வெளிநாடுகளிருந்து வந்தவர்களும், அவர்களின் உறவினர்களுமே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 166 இலிருந்து 176 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று 6 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதையடுத்து கொரோனா தொற்றிலிருந்து பூரண குணமடைந்து வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ள நிலையில், ஏனைய 138 நோயாளிகளும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், நாட்டிலுள்ள பல மருத்துவமனைகளில் தற்போது 259 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ,5,22)

## யாழிலிருந்து...

ஏனைய மாவட்டங்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தைச்சேர்ந்தவர்கள்நுழைவதுதொடர்பிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 7பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பலர் இன்னமும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் கொரோனா நோயாளிகள் இனங்காணப்படவில்லை.

இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதாயின் மருத்துவப் பரிசோதனை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைப் பகுதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டம் கொரோனா நோய் பரவிச் செல்லும் ஆபத்து வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளமையால் கொரோனா நோய் பரவுவதை தடுக்கும் தேசியப் பணிக்கு பங்களிப்பை வழங்குவதற்கு, கடல் மார்க்கமான புலம்பெயர்தலை நிறுத்துவதற்கு, கிளிநொச்சிப் பிரிவின் முழங்காவில், ஜெயபுரம், பூநகரி மற்றும் பளை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குச் சொந்தமான கடற் பிரதேசங்கள் ஊடாக வெளி நாட்டவர்கள் அல்லது வேறு பிரதேசங்களிலிருந்து வருகின்றவர்கள் தொடர்பாக கவனமாக இருந்து அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தி சட்டவிரோதமாக நாட்டுக்குள் ஏற்படுகின்ற புலம்பெயர்தலை தடுக்க கடற்படையினர் மற்றும் உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதாயின் அந்தப் பகுதியில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கருத்தைப் பெற வேண்டும் எனவும், அவ்வாறு ஊர் திரும்புவர்கள் 14 நாள்கள் சுயதனிமை ப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## பொதுத்...

த்தப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 26ஆம் திகதி வெளியிடப்படும் என்று கொழும்பைத் தளமாகக் கொண்ட அரசியல் உயர்மட்டங்கள் தெரிவித்தன.

மார்ச் 2ஆம் திகதி நள்ளிரவு நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வர்த்தமானி வெளியிட்டிருந்தார். அதற்கு அமைவாக ஏப்ரல் 25ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும் என்றும், மே மாதம் 14ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூட்டப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தார். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏப்ரல் 25ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியாது என்று வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

அரசமைப்புக்கு அமைவாக, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும். ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டுமாக இருந்தால், மே மாத இறுதியிலாவது தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனால் அரசமைப்பு நெருக்கடி ஏற்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது.

இந்த நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 113ஆவது உறுப்புரையின்படி ஜனாதிபதி அறிவித்த தினத்தில் தேர்தல் ஒரு மாவட்டத்தில் நடத்த முடியாவிட்டால் பிறிதொரு தினத்தில் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிட முடியும். அதற்கு அமைவாக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, 22 தேர்தல் மாவட்டங்களிலும் ஒரே நாளில் தேர்தலை நடத்தாமல், வெவ்வேறு நாள்களில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

22 மாவட்டங்களிலும் எந்தெந்தத் திகதிகளில் தேர்தல் நடைபெறும் என்பதைக் குறிப்பிட்டு, ஏப்பரல் 26ஆம் திகதி வர்த்தமானியை கோத்தாபய வெளியிடவுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஒ,5)

## கொரோனா எவருக்கும்...

என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தெரியவந்துள்ளதாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அரியாலை ஆராதனையில் பங்கேற்றவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். அதேபோன்று தாவடியில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவரின் சுற்றாடலிலுள்ள மக்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு கொரோனா தொற்றுச் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தாவடியிலுள்ள 18பேருக்கு கடந்த வெள்ளிக்கிழமை சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனை முடிவு நேற்று மதியம் வெளியிடப்பட்டது. அவர்களில் எவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

மானிப்பாய் மற்றும் அரியாலையிலுள்ள 14பேருக்கு நேற்றுமுன்தினம் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அரியாலை, குருநகர், கொழும்புத்துறையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 12 பேருக்கு நேற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கு நேற்றுச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றும், நேற்று முன்தினமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலேயே சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பரிசோதனை முடிவுகள் கண்டியிலுள்ள மூத்த மருத்துவருக்கு அனுப்பி அவரின் உறுதிப்படுத்தலின் பின்னரே வெளியிடப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## மின்சாரம்...

தெரிவித்தனர்.

தெல்லிப்பழை 8ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த சண்முகராசா செந்தூரன் (வயது 50) என்பவரே உயிரிழந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கால் இருவாரம் கோவில் கழுவப்படவில்லை. அதனால் அதனைக் கழுவிச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மின் ஒழுக்கால் அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சடலம் தெல்லிப்பழை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை. மனைவி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்றார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-114,26)

## ஊரடங்கை...

டுள்ளனர். 3 ஆயிரத்து 563 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மார்ச் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் நேற்று மாலை 6 மணி வரையான காலப்பகுதியினுள்ளேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் மார்ச் 20ஆம் திகதி முதல் நாட்டில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு வருகின்றது.

நேற்று நண்பகல் 12 மணி முதல் மாலை 6 மணி வரையான 6 மணித்தியால காலப்பகுதியினுள் மட்டும் 552 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 140 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ,5,22)

## வீதியில்...

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள போது, சாவகச்சேரி நகரை அண்டிய பகுதியில் சிலர், நகரத்தின் நிலைமைகளைச் சுற்றிப் பார்க்கச் சென்றுள்ளனர். அவர்கள் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், மற்றும் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டனர்.

அவர்கள் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது, அத்தியாவசியத் தேவை ஏதுமில்லாமல் நகரை சுற்றிப்பார்க்கவே அவர்கள் வந்த விடயம் வெளிப்பட்டது. இதனையடுத்து அவர்களை சாவகச்சேரி சந்தியில் இருந்து பஸ் நிலையம் வரை தவழ்ந்து செல்லுமாறு பொலிஸாரும் படையினரும் பணித்தனர். அதனையடுத்து , வீதியில் தவழ்ந்த இளைஞர்கள் எச்சரிக்கையின் பின்னர் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர். வீதியில் தவழ்ந்ததால் இளைஞர்களுக்கு முழங்காலில் காயங்கள் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ப-9)

# செயற்கைத் தட்டுப்பாட்டினை உருவாக்கும் மருந்து மாபியாக்கள்

## சாடுகிறார் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத் தலைவர்

**கொழும்பு, ஏப்.6**

**அதிக விலைக்கு விற்பதற்காகவும் அவசரமாக மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காகவும் சில தனியார் மருந்து விற்பனை மாபியாக்கள் செயற்கையாக மருந்துத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றன என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மருத்துவர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.**

2019ஆம் ஆண்டு இன்சுலின் உள்ளிட்ட 311 மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு இருந்தது. நான் தலைவரான பின்னர் அந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றுக்கான தட்டுப்பாடு இப்போது இல்லை. மேலும், இந்தியாவில் இருந்து மருந்துப் பொருள்கள் இலங்கைக்கு வந்துகொண்டிருக்கின்றன என்று அவர் கூறினார்.

இந்த மாபியாக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருவதால் எனக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

ஆனால், மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான பெப்ரவரி மாத கேள்வி மனுக்களில் மருந்தாக்க கூட்டுத்தாபனத்தின் தலைவர் கையெழுத்திடாததால் 310 வகையான மருந்து பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மருந்துகள் விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒரு சிலர் மாத்திரம் மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதால் மூன்று மாதங்களுக்குப் பாவிக்க வேண்டியவை ஒரு மாதத்துக்குள் முடிந்துவிட்டன என்று பிரசன்ன குணசேன பதிலளித்தார். இருந்தும், தட்டுப்பாடாக இருக்கின்ற மருந்துகள் இந்தியாவில் இருந்து வந்து கொண்டு இருக்கின்றன என்று மேலும் கூறினார். (ஒ,5)



வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது. நாட்டுச் சூழ் நிலை காரணமாக உரிய அனுமதிகள் பெறப்பட்டு ஆலய உள்வீதியில் மாத்திரம் தேர் வலம் வந்தது.

# அடுத்த கட்டத்துக்கு நகர இடமளிக்க வேண்டாம்

கொழும்பு, ஏப். 6

கொரோனா வைரஸ் இப்போது 3ஏ கட்டத்தில் நிற்கிறது. இதற்கு அப்பால் சென்றால் இலங்கையால் இதைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும் என்று ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் லால் ராதனசேகர தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் இப்போது வரை சில குடும்பங்க ளுக்கிடையேதான் பரவியுள்ளது. இது நாடு முழுவதும் பரவாதிருக்க சமூக இடைவெளி இறுக்கமாகப் பேணப்பட வேண்டும்.

ஊரடங்கு நீக்கப்பட்டாலும் நகருக்கு வருபவர்கள் 90 வீதத்தால் குறைய வேண்டும். இந்த வைரஸ் இலங்கைக்குள் உருவானது அல்ல. வெளிநாடுகளில் இருந்து நாம் நாட்டுக்குள் கொண்டுவந்துள்ளோம். ஆகவே, சமூக இடைவெளியைப் பேணினால் இதற்கு முடிவுகட்ட முடியும்.

ஊரடங்கு நீக்கப்படும் போது கடைகளைத் திறப்பதற்கு பதிலாக உள்ளூராட்சி சபைகள் இணைந்து ஒரு கிராமத்தில் ஒரு கடை என்ற அடிப்படையில் வைத்துக்கொண்டால் சமூக இடைவெளியைப் பேணமுடியும் என்று அவர் மேலும் கூறினார். (ஒ,5)



# தேர்தலை ஒத்திவைப்பதே தற்போதைக்குச் சிறந்தது

## சொல்கிறார் விஜயதாஸ ராஜபக்ஷ

கொழும்பு, ஏப். 6

“தற்போதைய சூழலில் பொதுத்தேர்தலை நடத்த முடியாத சூழல் நிலவுகின்றது. எனவே குறிப்பிட்ட காலத்துக்கு தேர்தலை ஒத்திவைப்பதே சிறந்தது” என்று முன்னாள் நீதி அமைச்சரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

8ஆவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 9ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும், நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தொடர்ச்சியாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதாக இருந்தால் அரசமைப்பின் 155 ஆவது சரத்துக்கு அமைய மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு உள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டே நாடாளுமன்றத்தைக் கூட்டமுடியும். ஆனால் நாட்டில் போர்ச்சூழல் காணப்படவில்லை. தொற்றுநோய் சார்ந்த பிரச்சினை தான் உள்ளது. ஆகவே அவசர ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்படாத நிலையில் தொற்றுநோய்த் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏதுநிலைமைகள் காணப்படுகின்றன.

தற்போதைய சூழலில் பொதுத்தேர்தலை நடத்த முடியாத சூழல் நிலவுகின்றது. எனவே குறிப்பிட்ட காலத்துக்கு ஒத்திவைப்பதே சிறந்தது.

இதுபற்றிய உயர்நீதிமன்றின் அபிப்பிராயத்தைக் கோருமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதியைக் கோரியுள்ளார். பொதுத்தேர்தலை ஒத்திவைப்பதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் காணப்படாவிடினும், நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை எடுக்க முடியும். அவசியக் கோட்பாட்டின் அடிப்படையில் நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான சகல அதிகாரங்களும் உள்ளன- என்றார். (து)



# 104 குடும்பங்களுக்கு மயிலிட்டியில் உதவி

யாழ்ப்பாணம், ஏப். 6

மயிலிட்டியில் மீள்குடி யேறியுள்ள 104 குடும் பங்களுக்கு தமிழ் மக் கள் கூட்டணியால் உல ருணவுப் பொதிகள் நேற் றுமுன்தினம் வெள்ளிக் கிழமை வழங்கப்பட் டுள்ளன.

மயிலிட்டித்துறை வடக்கு ஜே/251 கிராம அலுவ லர் பிரிவில் தெரிவு செய் யப்பட்ட 71 குடும்பங்க ளுக்கும், ஜே/250 கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 33 குடும்பங்களுக்கும் இவ் வாறு உலருணவுப் பொதிகள் வழங்கப் பட்டன.

தமிழ் மக்கள் கூட்டணி யின் ஊடகம் மற்றும் செயற்றிட்ட ஆக்கத்துக் கான உப செயலாளர் த.சிற்பரன், வடமராட்சி அமைப்பாளர் இரா.மயு தரன் ஆகியோர் இந்த உலருணவுப் பொதி களை வழங்கினர். (து)

# சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்ட 6 பேர் 4 நாள்களிலேயே விடுவிப்பு!

## பணிப்பாளர் மீது அதிகாரிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலிருந்து வருகைதந்திருந்த சாரதிகள் மற்றும் உதவியாளர்களென ஆறுபேர் 14 நாள்களுக்கு சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், 4 நாள்களுக்குள் அவர்களை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுவித்துள்ளார் என்று லிந்துலை பொது சுகாதார பரிசோதகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவக்கூடிய அபாய வலயமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலிருந்து கடந்த 31 ஆம் திகதி லிந்துலை சுகாதார மருத்துவப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தனியார் தேயிலைத் தொழிற்சாலையொன்றுக்கு சாரதிகள், அவர்களின் உதவியாளர்களென 12 பேர் கனரக வாகனங்களில் வந்துள்ளனர்.

இதனையடுத்து அவர்களை சுய தனிமைக்கு உட்படுத்துவதற்கு அக்கரப்பத்தனை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

12 பேரில் அறுவர் பதுளைப் பகுதியைச் சேர்ந்தவர்களென்பதால் அவர்களுடைய வீடுகளுக்குசென்று அந்தப் பகுதியிலுள்ள சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்பின்கீழ் சுய தனிமை நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. ஏனையோரை லிந்துலைப் பகுதியிலுள்ள தனியார் ஹொட்டலொன்றில் சுய தனிமைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், நான்கு நாள்கள் மாத்திரமே கடந்த நிலையில் அவர்கள் கண்காணிப்பிலிருந்து நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், சுயதனிமை நடைமுறையை இவர்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதிப்படுத்தல் சான்றிதழ் வழங்கியுள்ளார் என்றும் நிறுவனத்துக்குரிய கனகர வாகனங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

“இந்த நடவடிக்கையை விஞ்ஞான - தொழில்நுட்ப ரீதியில் அணுகவேண்டும். ஒரு நபரை சுய தனிமைக்கு உட்படுத்தும் போது அவர் தொடர்பைப் பேணியிருந்த நபர்களை அடிப்படையாகக்கொண்டே கால எல்லை தீர்மானிக்கப்படுகின்றது. அவர்களின் தொடர்பைப் பேணிய நபர்களுக்கு எவ்வித சிக்கலும் இல்லையெனில் 14 நாள்கள் என்ற கோட்பாடு பொருந்தாது” என்று மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலகல தெரிவித்தார். (து-44)

# உள்ளூர் உற்பத்தி மாவட்டத்துக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துங்கள்

## மாவட்டச் செயலரிடம் மக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 6**

**யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக ரின் மீன் கொண்டு வரமால் தவிர்க்கப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ப உள்ளூர் உற்பத்தி மாவட்டத்திலுள்ளவர்களுக்கு முழுமையாகக் கிடைப்பதையும் உறுதி செய்யவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட மக்கள் மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

நியாய விலையில் விற்பனை செய்வதற்காக 25 மாவட்டங்களுக்கும் பொருள்கள் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 50 ஆயிரம் ரின் மீன்கள் ஒதுக்கப்பட்டன. ஆனாலும் அவை மாவட்டத்துக்கு எடுத்து வரப்படவில்லை. யாழ்ப்பாண குடா நாட்டு கடற்றொழிலாளர்களின் உழைப்பில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக அவை எடுத்து வரப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் 22 ஆயிரம் மீனவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர். அவர்கள் ஊடாக சராசரியாக 50 ஆயிரம் கிலோவே தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றது. வெளிமாவட்டங்களுக்கு குறைந்தளவே ஏற்றுமதி செய்யப்பட்டாலும் 35 ஆயிரம் கிலோவே, குடாநாட்டின் 6 லட்சம் மக்களின் தேவைக்காக எஞ்சுகின்றது. இது போதுமான அளவு அல்ல என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஒ,5,105)

# தமிழர்களையும் கவனியுங்கள்

*சித்தார்த்தன் ஜனாதிபதிக்குக் கடிதம்*

யாழ்ப்பாணம், ஏப்.6

நாட்டின் தற்போதைய சுகாதார நெருக்கடிச் சூழலில், தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கும் நிலைமைகள் தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கரிசனை கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனா நோய்க்கிருமி பரவலை நாம் எதிர்த்துப் போராடும் மிக முக்கியமான இந்த நேரத்தில், நாட்டு மக்களது வாழ்க்கையின் இயல்புநிலை கண்டிப்பாகப் பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு நீங்கள் எடுத்து வரும் முயற்சிகள் அசாதாரணமானவை.

அரசாங்கத்தின் அதி உயர் பீடத்தில் உரிய முடிவுகள் உடனுக்குடன் எடுக்கப்பட்டாலும், அரசாங்கத்தின் கீழ் மட்டத்தில் அந்த முடிவுகள் செயற்படுத்தப் படுவதில் வேகமின்மையும் வினைத்திறன் இன்மையுமே தெரிகின்றது.

குறைந்தபட்சம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிலை இது வரை இது தான்.

தொடர்ச்சியாக ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருப்பதனால், அவர்கள் தினசரி உழைப்புக்குச் செல்லமுடியாத நிலையில் இருக்கின்றனர். இந்த நிலையானது வடக்கு மாகாணத்தின் பின்தங்கிய கிராமப்பகுதிகளில் பட்டினி நிலையை ஏற்படுத்திவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

"ஜனாதிபதி செயலணி," வருமானம் குறைந்த மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை வீட்டுக்கு வீடு வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்தியிருக்கின்றது. அதே போல உள்ளூர் விவசாயிகளிடமி ருந்து உற்பத்திகளை வாங்கி விற்பதன் மூலம், அவர்களது பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதற்கு ஒரு திட்டத்தையும் உருவாக்கியிருக்கின்றது. ஆனால், அவை எங்கள் பகுதிகளில் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை.

இவற்றுக்கான ஒரு சரியான கண்காணிப்பு பொறிமுறையானது எங்கள் பகுதியில் நடைமுறையில் இல்லை

அதேவேளை இந்த கடுமையான நேரத்தில், அரசியல் கைதிகளாக உள்ள தமது உறவுகள் மற்றும் அன்புக்குரியவர்கள் பற்றியும் தமிழ் மக்கள் பெரிதும் கவலைப்படுகின்றனர். சிறைகளில் அவர்கள் ஏற்கனவே கழித்து விட்ட காலத்தைக் கருத்தில் கொண்டும், நம் நாட்டின் தற்போதைய நோய்த் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டும் இந்த விடயத்தைச் சாதகமாக ஆராய்ந்து, சிறைகளில் இருந்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- என் றுள்ளது. (க)

# முதலில் 1390 பின்னரே மருத்துவமனை!

கொழும்பு, ஏப்.6

இருமல், தடிமன், சுவாசப் பிரச்சினைகள் இருப்பின் 1390 என்ற இலக்கத்துக்கு, அழைக்குமாறும் உடனடியாக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டாமென்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறித்த எண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்திய பின்னர், நோய்அறிகுறிகள் குறித்து ஆராய்ந்த பின்னர், தேவையேற்படின் மருத்துவமனைக்குச் செல்வதற்கு 1990 அம்புலன்ஸ் வசதி பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

# கைவிடப்பட்ட காணியில் குழந்தை உயிருடன் மீட்பு

மட்டக்களப்பு,ஏப்.6



கைவிடப்பட்ட காணியொன்றிலிருந்து ஆண் குழந்தையொன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு, கோப்பாவெளி தும்பாலஞ்சோலைக் கிராமத்திலேயே நேற்றுக்காலை இந்தக் குழந்தை மீட்கப்பட் டது.

குழந்தையின் அழுகை குரல் கேட்டு, அந்த இடத்துக்குச் சென்ற வயதான பெண் ஒருவரே குழந்தையை மீட்டுள்ளார்.

பின்னர் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்ததன் அடிப்படையில் குழந்தை பொலிஸாரால் கரடியனாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிராம மக்களின் ஒத்துழைப்புடன் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், குழந்தையின் தாயைக் கண்டு பிடித்துள்ளனர். அவரையும் வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

# நாயால் வந்த கொலை 8 பேருக்கும் மறியல்

கொழும்பு, ஏப். 6

முல்லைத்தீவு குமுழமுனையில் இளைஞர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 8 பேரும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குமுழமுனையில் வசிக்கும் 3 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 8 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதிவான் முன் நேற்று முற்படுத்தப்பட்டனர். அதன்போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அங்கு வீடு ஒன்றில் வளர்க்கப்பட்ட நாய் அயலிலுள்ள வீட்டுக்குள் சென்று பொருள்களை கௌவிச் சென்றுள்ளது என்றும் அதனால் அந்த வீட்டுக்காரர், அந்த நாயை தனது வீட்டில் கட்டி வைத்திருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

இதனால் ஏற்பட்ட தர்க்கமே கைகலப்பாகியதில் இ.ரமேஷ் (வயது - 26) என்ற இளைஞன் தலையில் அடித்துப் படுகாயப்படுத்தப்பட்டார். அதனால் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு அவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-19)

# 100 தெரு நாய்களுக்கு உணவிடும் பொலிஸார்





முல்லைத்தீவு,ஏப்.6

புதுக்குடியிருப்பு நகர் பகுதியை அண்டிய வீதிகளில் உள்ள தெரு நாய்களுக்கு, உணவளிக்கும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் நடைமுறையில் உள்ள ஊரடங்கு காரணமாக உணவகங்கள் மற்றும் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கடும் வெப்பம் காரணமாக, உணவு இல்லாமல் நாய்கள் அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது.

இந்தநிலையில் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் கடைகளின் முன்னால் படுத்துறங்கித்திரியும், சுமார் நூற்றுக்கு மேற்பட்ட நாய்களுக்கு உணவளிக்கும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (த-19)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கோத்தாவும் முதலையும்

கொரோனாவால் நாடே பதறித்துடித்துக் கொண்டிருக்கையில், தேர்தல் என்ற பிடில் வாசிப்பதை ஜனாதிபதி கோத்தாபய விடாமல் தொடர்கிறார். உலகின் பல நாடுகளிலும் கொரோனா தன் ஆக்கிரமிப்பை அகலப்படுத்திக் கொண்டிருந்தபோது, இலங்கையிலும் அது பரவும் அபாயம் ஏற்பட்டிருந்தது. அப்போது உடனடியாகப் பாடசாலைகளை இழுத்து மூடியது அரசு. ஆனால் கொரோனா ஒன்றும் பாடசாலைகளில் உற்பத்தியாகும் வைரஸ் அல்லவே. அங்கு யாரும் கொரோனாவைக் காவி வந்தால் பரவும் வேகம் அதிகமாயிருக்கும் என்பதால் பாடசாலைகளை மூடிய அரசு, கொரோனா வரும் வாசலான விமான நிலையத்தை மட்டும் அகலத் திறந்து வைத்து, கொரோனாவுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்கும் நிலையிலேயே இருந்தது.

கடைசியில் எது நடக்கக்கூடாதென்று அத்தனைபேரும் பயந்து கொண்டிருந்தோமோ அது நடந்தே விட்டது. இத்தாலி, சுவிஸ் என்று வெளிநாடுகளில் இருந்து வந்தோரால் இலங்கையில் காலூன்றிய கொரோனா இப்போது 175 பேரையும் தாண்டி பரவும் வெறியோடு அலையத் தொடங்க, மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள். அதிலும் சில கிராமங்கள் வெளித்தொடர்புகள் ஏதுமின்றி , அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கூட இல்லாமல் துண்டிக்கப்பட்ட நிலையில் தவிக்கின்றன. ஏனைய பகுதிகளிலும் ஊரடங்கு தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுவதால், எல்லாப்பணிகளும் உறைநிலைக்கு மாறிவிட்டன. அதிலும் குறிப்பாக தினசரி வேலைக்கு போய் வந்து வீட்டில் உலை வைக்கும் , பாட்டாளிக் குடும்பங்களின் நிலை மிகப்பரிதாபகரமானது. வேலையும் இல்லை, காசும் இல்லை, பொருளும் இல்லை என்ற நிலையில், பசி மட்டுமே தாராளமாக அவர்களிடம். பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த நிவாரணம் தருகிறோம், இந்த நிவாரணம் தருகிறோம் என்று நாளொரு உதவியும், பொழுதொரு திட்டமுமாக அறிக்கைகள் தான் அரசிடமிருந்து வந்து கொண்டிருக்கின்றனவே தவிர, உருப்படியான எந்தவொரு நிவாரணமும் கிடைக்கவில்லை என்பதே மக்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது. ஆனாலும் உள்ளூர் இளைஞர்களும், பொது அமைப்புகளும், புலம்பெயரிகளும் களத்தில் இறங்கி அற்றார் அழிபசி தீர்க்கும் காரியங்களைத் தொடர்ச்சியாகச் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களின் உதவியும் இல்லாவிட்டால் கொரோனாவை விடவும் பட்டினியால் இறந்தோர் தொகை எகிறியிருக்கும். இன்னும் சில வாரங்களுக்கு இதே ஊரடங்கு வாழ்வே இலங்கையர்களுக்கு நீடிக்கும் சூழலுக்கே சாத்தியங்கள் அதிகம். அப்படி நீடித்தால் மக்களின் நிலை படுமோசமாக மாறக்கூடும்.

ஒருபக்கம் மக்களின் நிலை இப்படியிருக்க மறுபுறமோ இதைப்பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாது, ஊரடங்கால் மூழ்கிப் போனவர்களின் வாழ்வை எப்படி சரி செய்யலாம் என்பது பற்றிச் சிந்திக்காது, பொதுத்தேர்தலை நடத்துவது எப்படி என்ற ஒரே யோசனையில் மட்டுமே அரசு மூழ்கியிருக்கிறது. கொரோனா பரவும் சூழலில் நாடு முழுதும் ஒரேநாளில் தேர்தலை நடத்துவது அரசு மீதான கடும் விமர்சனங்களைக் கொண்டுவரும் என்பதால், கட்டம் கட்டமாக நடத்த தீவிர மந்திராலோசனை நடப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எல்லோரது கவனமும் கொரோனாவின் மீது இருக்கையில் அதற்கு எதிரான நடவடிக்கைகளை சகல ஊடகங்களிலும் வெளிப்படுத்தி, அதையே பிரசாரமாக மாற்றி, மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற இது தக்க தருணம் என அரசு நினைக்கிறது. அதனாலேயே கொரோனா வந்து கொத்துக் கொத்தாக மக்கள் மரணிக்கும் நிலை வந்தாலும் தேர்தலை இப்போதே நடத்துவது என்று அரசு பிடிவாதம் பிடிக்கிறது. முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா என்றொரு பழமொழியுண்டு. இனி அதனை “கோத்தாவும் முதலையும் கொண்டது விடா” என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.



# 1,400 பேருக்கு கொரோனா விரைவில் தொற்றும்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.6

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை விரைவில் ஆயிரத்து 400 ஆக உயரக் கூடும். கொழும்பு பல்கலைக் கழக மருத்துவப்பீட கணக்கியல் மாதிரியின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை எதிர்கொள்ள இலவச சுகாதார சேவைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழுக்கு வழங்கிய செவ்வியொன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கணக்கியல் மாதிரியின் அடிப்படையிலேயே நேற்று 4 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், சிகிச்சை பெறும் கொரோனா தொற்றாளிகளின் எண்ணிக்கை 137 ஆக அதிகரித்திருந்தது. எனினும் கணக்கியல் மாதிரியை விட தொற்றாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். கணக்கியல் மாதிரியின்படி ஏப்ரல் 7 ஆம் திகதி தொற்றாளர்களின் தொகை 163 ஆக இருக்கும். ஏப்ரல் 17ஆம் திகதி 340ஆக உயரும். என்றார்.

குறித்த கணக்கியல் மாதிரி, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மனோஜ் கிருஷாந்த, பேராசிரியர் நிசாந்த பெரேரா ஆகியோரால் இரண்டு கிழமைக்கு முன்னர் தயாரிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைப் பொறுத்தவரையில், தற்போது மூன்றாவது கட்டத்தின் ‘ஏ’ பிரிவில் இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இது வீடு, குழுமம் என்ற அடிப்படையிலேயே தற்போது பரவி வருகிறது. எனினும் இதனை 3 ‘பி ’என்ற சிறிய குழுமம் மற்றும் 4ஆம் பிரிவான சமூகத்தரத்துக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கக்கூடாது. இந்த நிலையில் தற்போது இலங்கையில் 2 ஆயிரம் கொரோனா வைரஸ் தொற்றாளர்களைப் பராமரிக்கும் திறன் உள்ளது. எனினும் உரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது போனால், அது 3 ஆயிரம் தொற்றாளர்களாக மாறும் என்று மருத்துவ அதிகாரிகள் சம்மேளனத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி அலுத்கே தெரிவித்துள்ளார். (க)

# வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஏப். 6

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராமங்களுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா நேற்றுப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்ததுடன் மக்களுக்கு நிவாரணப் பொதிகளையும் வழங்கி வைத்தார்.

குடத்தனை தொடக்கம் முள்ளியான் வரையுள்ள பகுதி மக்களில் சுமார் 300 பேருக்கு உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் சா. அரியகுமார், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிபர் முன்னணியின் தலைவர் க. பிருந்தன், செயலர் கலையமுதன், மகளிர் அணி உறுப்பினர் துஷ்யந்தி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொருளாளர் பொ. கனகசபாபதி மற்றும் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஓ,5,22,173)





# பக்தர்களின்றி நேற்று குருத்தோலை ஞாயிறு!

யாழ்ப்பாணம்,ஏப்.6

குருத்தோலை ஞாயிறுத் திருப்பலி வழிபாடுகள், பக்தர்கள் இன்றி நேற்று ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆயர் இல்லச் சிற்றாலயத்தில் நேற்றுக் காலை யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ஜோசப் தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நாட்டில் நடைமுறையில் உள்ள ஊடரங்குச் சட்டத்தால் பொது மக்கள் எவரும் திருப்பலியில் பங்கேற்கவில்லை. (க-7)

# கொரோனா வதந்தி: பெண் கைதானார்

கொழும்பு, ஏப். 6

கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாக சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்களைப் பிரசாரப்படுத்திய பெண்ணொருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்தப் பெண் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் பணிப்பாளராகக் கடமையாற்றி வருபவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர். கொரோனா வைரஸ் மற்றும் அது சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக பொய்யான தகவல்களைப் பரப்பும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் ஏற்கனவே எச்சரித்துள்ளனர்.

இதனடிப்படையில், முகநூல் உட்பட சமூக வலைத்தளங்களில் பொய்யான தகவல்களை வெளியிட்ட சிலர் அண்மைக்காலமாக கைதுசெய்யப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

நிலாந்தன்

# கொரோனா காலத்திலும் திருந்தாத மனிதர்கள்?



கொரோனா வைரஸ் ஓர் உலகப் பொது ஆபத்தாக மாறிய போது நாடுகள் தமது தேசிய எல்லைகளை மூடத் தொடங்கிக் கொண்டிருந்த ஒரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். உலகம் முழுவதிலும் போரில் ஈடுபடும் தரப்புகள் தங்களுக்கிடையே யுத்த நிறுத்தத்துக்குப் போக வேண்டும் என்று அந்த அறிவிப்பு கேட்டிருந்தது.

ஆனால் உலகப் பேரரசான ஐக்கிய அமெரிக்கா ஏற்கெனவே ஈரானின் ஆதரவைப் பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பினரின் தளங்களின் மீது தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்த ஒரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் அறிவிப்பை போரில் ஈடுபடும் தரப்புகள் பெருமளவுக்கு பொருட்படுத்தவில்லை என்றே தோன்றியது.

உதாரணமாக இந்தியாவில் சதீஷ்கர் மாவட்டத்தில் மாவோயிஸ்ட் போராளிகள் இந்திய துருப்புகளின் மீது தாக்குதல் தொடுத்துக் கிட்டத்தட்ட பத்துக்கும் குறையாத படை வீரர்களை கொன்றிருந்தார்கள். அதற்குப்பின் ஆபிரிக்காவில் நைஜீரியாவில் போகோ ஹராம் இயக்கத்தால் எழுபதுக்கும் குறையாத நைஜீரிய துருப்புகள் கொல்லப்பட்டார்கள். அதற்கும் சற்று பிந்தி கடந்த வாரம் தலி பான்கள் ஆப்கான் அரச துருப்புகளின் மீது தாக்குதலைத் தொடுத்திருந்தார்கள். ஏற்கனவே அங்கு யுத்த நிறுத்தம் உண்டு. அது இந்த ஆண்டில் ஒரு பெரிய அடைவாக காட்டப்பட்டது. அதனால் யுத்த நிறுத்தம் இருக்கத்தக்கதாகவே தலிபான்கள் ஆப்கான் துருப்புக்கள் மீது தாக்குதலை நடாத்திச் சிலரைக் கொன்றிருக்கிறார்கள். வடகொரியா வழமைபோல ஏவுகணைச் சோதனைகளை செய்து கொண்டிருக்கிறது.

அல்கொய்தாவும் ஐ.எஸ்.ஐ.எஸ்சும் கொரோனா வைரஸை கடவுளின் "மிகச்சிறிய சிப்பாய்" என்று கருதுவதாக தெரிகிறது. அல்கொய்தாவின் ஆதரவாளர் ஒருவர் ஒன்லைன் உரையாடல்களின் போது கொரோனா வைரஸ் ஆனது அல்லாவின் சிப்பாய்" என்று வர்ணித்திருக்கிறார். இஸ்லாத்துக்கு எதிராக அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் முன்னெடுத்து வரும் போருக்கு எதிராக கடவுளின் கோபம் அவர்கள் மீது திரும்பியிருக்கிறது என்ற தொனிப்பட அல்கைதாவும் ஐ.எஸ்.ஐ.எஸ்சும் கருத்து கூறியுள்ளன. செப்ரெம்பர் 11 தாக்குதலின் போது கொல்லப்பட்ட அமெரிக்கர்களின் மொத்தத் தொகையை விட அதிக தொகையினர் கடந்த வாரத்தில் மட்டும் கொரோனா வைரசால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எனவே அந்த வைரஸை கடவுளின் மிகச்சிறிய சிப்பாய் என்று அல்கொய்தாவின் பிரச்சார ஏடாகிய அஸ்ஸகாப் (AsSahab) வர்ணித்துள்ளது.

அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கேட்டுக் கொண்ட பின்னரும் கூட கொரோனா வைரஸினால் இதுவரை ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட பின்னரும் கூட போரில் ஈடுபடும் தரப்புக்கள் போரை நிறுத்த தயாரில்லை. போருக்கு காரணமான பகைமையும் குறையவில்லை. ஒரு வைரசுக்கு எதிராக உலகம் முழுவதும் போராடிக் கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்தில் தங்களுக்கிடையே காணப்படும் முரண்பாடுகளை தற்காலிகமாகவேனும் ஒத்திவைத்து யுத்த நிறுத்தத்துக்கு போக பெரும்பாலான தரப்புக்கள் தயாரில்லை.

இதில் விதிவிலக்காக கொலம்பியாவில் அரசுக்கு எதிராக போராடும் அமைப்பாகிய தேசிய விடுதலை ராணுவம் (ELN)ஒருதலைப்பட்சமாக ஏப்ரல் மாதம் முழுவதுக்கும் யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கிறது. இது மிக அரிதான ஒரு புறநடை.

ஆனால் பொதுப் போக்கு எதுவென்று பார்த்தால் ஓர் உலகப் பேரிடரின் போதும் உள்நாட்டுப் போர்கள் நிறுத்தப்படவில்லை என்பதுதான். போர்கள் மட்டுமல்ல உலகின் பொதுவான வணிக மனோநிலை மாறவே இல்லை. ஓர் உலகப் பொதுப் பேரிடரின் போதும் வியாபாரிகள் இரங்கவில்லை. உலகம் முழுவதிலும் வர்த்தக நிலையங்களில் வரிசையாகக் காத்திருக்கும் மக்கள் வழமையை விடக் கூடுதலான விலைகளைக் கொடுத்தே பொருட்களை வாங்க வேண்டியிருக்கிறது. அனர்த்த காலச் சுரண்டல் உலகம் முழுவதும் ஒன்றுதான்.

பெருந்தமிழர் தரப்பில் தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் கொரோனாக் காலம் விலைகளை கூட்டியிருக்கிறது. பொருட்களைப் பதுக்கியிருக்கிறது. நாட்டில், வீட்டுக்கு வரும் வியாபாரிகளில் மிகச்சிலரைத் தவிர அதிகமானவர்கள் கொள்ளைக்காரர்களாகவே தெரிகிறார்கள். எல்லாவற்றுக்கும் அறா விலை. இலங்கை அரசாங்கம் மீன் ரின்னுக்கும் பருப்புக்கும் முட்டைக்கும் விலையை குறைத்தது. அதிலிருந்து தொடங்கி நிவாரணத்துக்கு வழங்கக் கூட பருப்பைக் கண்டு பிடிப்பது கடினமாக இருக்கிறது. எல்லாவற்றையும் பதுக்கி விட்டார்கள். முட்டையை, பருப்பை, டின் மீனை அரசாங்கம் அறிவித்திருக்கும் குறைந்த விலைக்கு விற்க எந்த ஒரு வியாபாரியும் தயாரில்லை. அப்படி விற்பதால் வரும் நட்டத்தை யார் பொறுப்பது என்று கேட்கிறார்கள். அரசாங்கம் "சதோசா"விற்கு மட்டுமே மானியம் கொடுக்கிறது. எங்களுக்கு தரவில்லை. நாங்கள் வாங்கிய விலைக்குத்தான் பொருட்களை விற்கலாம். என்று அவர்கள் கூறுகிறார்கள். முட்டை கிடந்து அழுகினாலும் பரவாயில்லை என்று கருதும் வியாபாரிகளுடைய இதயத்தை கொரோனா வைரஸ் இன்னும் கரைக்கத் தொடங்கவில்லை. இதுதான் நிலைமை. ஒரு உலகப் பொதுப் பேரிடர் ஆனது எல்லாவற்றையும் உடனடியாக மாற்றி விடவில்லை. வியாபாரிகள் மட்டுமல்ல சிங்களத் தலைவர்களும் திருந்த மாட்டார்கள் என்பதைத் தான் கொரோனா வைரஸ் நிரூபித்திருக்கிறது.



உலகம் முழுவதும் சமூக இடைவெளி பற்றியும் தனிமைப்படுத்தல் பற்றியும் அச்சப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தும் விதத்திலும் இன இடைவெளியை அதிகப்படுத்தும் விதத்திலும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளியான சுனில் ரத்னாயக்கவை விடுதலை செய்திருக்கிறது.

படைக் கட்டமைப்புக்கும் ராஜபக்சக்களுக்கும் இடையிலான உறவு சீமெந்தினால் கட்டப்பட்ட ஒன்று. படைத் தரப்பைத் தண்டிப்பது என்பது அதன் தர்க்கபூர்வ முடிவாக அக்குற்றங்களை செய்யுமாறு அரசியல் தீர்மானம் எடுத்த ராஜபக்சக்களை தண்டிப்பதுதான். எனவே ராஜபக்சக்கள் இரண்டாவது தடவை ஆட்சிக்கு வந்ததிலிருந்து படைத் தரப்பைத் தண்டிக்கப்பட முடியாத ஒரு தரப்பாகக் கட்டியெழுப்ப முயற்சிக்கிறார்கள். ஏனெனில் படைத் தரப்பை தண்டனையிலிருந்து பாதுகாத்தால் அது அதன் தர்க்க பூர்வ விளைவாக ராஜபக்ச சகோதரர்களையும் தண்டனையிலிருந்து பாதுகாத்துவிடும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

கோத்தாபய ஜனாதிபதியான பின் நாட்டின் முக்கிய திணைக்களங்களைப் பாதுகாப்பு அமைச்சுக்கு குட்பட்டதாக மாற்றினார். சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்கா பயணத் தடை விதித்தது. ஆனால் ராஜபக்சக்கள் இறங்கி வரவில்லை.

அமெரிக்கத் தடைக்கு எதிரான நடவடிக்கை என்று கூறிக்கொண்டு ஐ.நா. தீர்மானத்திலிருந்து விலகப் போவதாக அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல சிவில் கட்டமைப்புகளுக்கும் ஓய்வுபெற்ற படைப் பிரதானிகளைப் பொறுப்பாக நியமித்தார்கள். அண்மையில் கூட மேல் மாகாணத்தின் ஆளுநராக முன்னாள் வான் படைத் தளபதி நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்வாறு ராஜபக்சக்கள் நாட்டை மேலும் மேலும் படை மயப்படுத்திவந்த ஒரு பின்னணியில் தான் கொரோனாத் தாக்கம் பரவியது. இது விடயத்தில் கொரோனா அவர்களுக்கு விழுந்த ஒரு லொத்தர். கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையும் படையினரிடம் கையளித்ததன் மூலம் இறுதியிலும் இறுதியாக கொரோனாவை வெற்றி கொள்ளும் பொழுது அந்த புகழ் அனைத்தும் படைத்தரப்புக்கே சேரும். இதன் மூலம் படைத்தரப்புக்கு வெள்ளை அடிக்கலாம்.

இவ்விதமாக படைத்தரப்பைப் பாதுகாத்தல் என்ற நிகழ்ச்சி நிரலின் கீழ் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒரு படை வீரருக்கு கொரோனாக் காலத்தில் அரசாங்கம் மன்னிப்பு வழங்கி இருக்கிறது. தமிழ்மக்களின் கவனமும் உலகத்தின் கவனமும் ஒரு வைரசின் மீது குவிந்து இருக்க அந்த வைரஸை வெற்றி கொள்ளும் நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கும் படைத் தரப்பை மகிழ்விக்கும் விதத்தில் சுனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.


இதன் மூலம் ஓர் உலக பேரிடரின் போதும் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் எதையும் கற்றுக் கொள்ளாது என்பது மறுபடியும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 15ஆண்டுகளில் இலங்கைத்தீவு இரண்டு உலகப் பொதுப் பேரிடர்களை சந்தித்திருக்கிறது. முதலாவது சுனாமி. இப்பொழுது கொரோனா. சுனாமியிலிருந்து இந்தோனேசிய அரசும் அதற்கெதிராக போராடிய அச்சே மக்களும் பெற்றுக் கொண்ட படிப்பினைகளின் விளைவே அங்கு ஏற்பட்ட சமாதான உடன்படிக்கை ஆகும். ஆனால் இலங்கைத்தீவு சுனாமிப் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் தோல்வியுற்றது. இப்பொழுதும் கொரோனாத் தாக்கத்திலிருந்து அவர்கள் எதையும் கற்றுக் கொள்ளத் தயாரில்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் கொரோனாவுக்குப் பின்னரான இலங்கைதீவில் பெரும்பாலும் படைத் தரப்பைக் கொண்டாடும் ஓர் அரசியலே கோலோச்சும். அதாவது போர்க் குற்றங்களை மறைக்கின்ற, போர்க் குற்றவாளிகளை மன்னிக்கின்ற ஓர் அரசியல் சூழல். இதை இன்னும் கூர்மையாக சொன்னால் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக் கூறத் தயாரற்ற ஓர் அரசியல் சூழல். சுனில் ரத்நாயக்காவுக்கு வழங்கப்பட்ட மன்னிப்பு கொரோனாவுக்குப் பின்னரான அந்த அரசியலுக்குக் கட்டியம் கூறுகிறதா?

"கொவிட் -19"உம் இனவாதமும் சாவுக்கேதான தொற்று நோய்கள். அவற்றைப் பற்றிப் பிடிக்கக் கூடியவர்களை அவைத் தொற்றிக் கொள்ளும். நாங்கள் அவற்றில் ஒன்று பரவக் கூடிய வழிகளைப் பூட்டி விட்டோம். ஆனால் முரண்பாடான விதத்தில் மற்றொன்று பெருக்கெடுத்தோடும் வழிகளைத் திறந்துவிட்டுள்ளோம்" என்று அண்மையில் கரு ஜயசூரிய கூறியிருக்கிறார். அப்படியென்றால் தெருக்களை மூடி கிராமங்களை மூடி நகரங்களை மூடி மாவட்டங்களை மூடி கொரோனாவை வெற்றி கொண்ட பின்னரும் நாடு பெருக்கெடுத்தோடும் இனவாதத்தால் இறுதியிலும் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டு விடுமா?

**கொவிட்19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சமூக இடைவெளியோடிருத்தல் (social distancing) என்பது பரிந்துரைக்கப்படுகிறது. இந்த விடயத்தை எவ்வாறு கையாளலாம்?**

ஓர் அகநோக்கு 03

# கொவிட்-19 தொற்றுநோய் பரவலினால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றம்:



Dr. சா. சிவயோகன்
உளமருத்துவ நிபுணர்

நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த கொவிட்19 வைரஸானது மிக இலகுவில், ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தொற்றக் கூடியது. தொற்றுள்ள ஒருவரிடமிருந்து சுவாசப்பாதை வழியூடாக அல்லது ஏனைய வழிகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் வைரஸானது, இன்னுமொருவரின் உடலினுள், இலகுவாக அவரது வாய், மூக்கு, மற்றும் கண்களின் வழி தொற்றிக் கொள்கின்றது. பொதுவாக, தொற்று ஏற்பட்டவருடனான நேரடித் தொடுகை, அவர் தொட்ட மற்றும் உபயோகித்த பொருட்களின் மீதான தொடுகை, அவரது வெளிச்சுவாசம், தும்மல் இருமல் போன்றவற்றின் போது வெளிப்படும் சிறுதுளிகள் பரவியிருக்கின்ற பௌதிகச் சூழலுக்கு முகங்கொடுத்தல் போன்றவற்றினால் இந்தத் தொற்று நிகழ்கின்றது. தொற்று நிகழ்ந்த பின்னர், அந்தத் தொற்றுக்குள்ளானவர் தொற்றின் காரணமாக ஏற்படும் உடல் ரீதியிலான அறிகுறிகளை வெளிக்காட்டுவதற்கு முன்னரே பிறருக்குத் தொற்றைப் பரப்பக்கூடிய ஒருவராக மாறிவிடுவார். இந்த வைரஸின் தன்மை அப்படிப்பட்டது. எனவே, நோய் வெளிப்பாடுகளைக் காட்டும் ஒருவரிடமிருந்து மாத்திரமில்லாது, நோய் அறிகுறிகள் வெளித்தெரியாது இருக்கும் ஏனைய பலரிடமிருந்தும் இந்தத் தொற்று பரவலாம். இன்னுமொரு வகையில் கூறினால் இந்தத் தொற்றைப் பரப்புவது யார் என்ற அடையாளம் தெரியாமலே கொவிட்19 தொற்றுப் பரவிக் கொண்டிருக்கும். எனவே, இந்தப் பரவுகையைத் தடுப்பதற்குரிய மூன்று முக்கிய வழிகளாகப் பின்வரும் முறைகள் முன்மொழியப்படுகின்றன. முதலாவது, நாம் அடிக்கடி கைகளைச் சவர்க்காரமிட்டு முறையாகக் கழுவிக் கொண்டிருப்பதன் மூலம் எமது கைகள் ஊடாகத் தொற்று ஏற்படாதிருப்பதனை உறுதி செய்தல். இரண்டாவது, கண், மூக்கு, வாய்வழி மூலம் தொற்று ஏற்படுவதனைத் தவிர்த்துக் கொள்வதற்காகப் பொருத்தமான பாதுகாப்புக் கவசங்களை அணிதல். மூன்றாவதாக, தொற்றாளர் அடையாளந்தெரியாத ஒருவராக இருக்கக்கூடும் என்பதனால், நாம் எல்லோரிடமிருந்தும் ஒரு பௌதிக இடைவெளியைப் பேணவேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்படுகின்றது.

துரதிஷ்டவசமாக இந்த ஆளிடைப் பௌதிக இடைவெளி (interpersonal physical distance) என்பது, அதாவது ஒருவருடைய உடலிலிருந்து போதியளவு தூரம் (1 - 2 மீற்றர்) விலகியிருத்தல் என்பது, சமூக இடைவெளியோடிருத்தல் (social distancing) எனத் தவறாகப் பெயரிடப்பட்டு விட்டது. பெயரில் என்ன இருக்கின்றது? பெயருக்குப் பின்னால் இருக்கின்ற விடயத்தை, அதாவது கொவிட் 19 ஆனது சமுதாயத்தினுள் பரவிப் பாரிய அழிவுகளை ஏற்படுத்தாது இருப்பதற்கான எமது சமூகப் பங்களிப்பை, நாம் எவ்வாறு பொறுப்புணர்வோடு நடைமுறைப்படுத்தலாம் என்பதில் கவனஞ் செலுத்துதலே தற்பொழுது முக்கியமானதாகின்றது.

ஆட்களுக்கிடையில் போதியளவு பௌதிக இடைவெளியைப் பேணுதல் என்பது எமது சமுதாயத்தில் அதிக சவால்கள் நிறைந்த ஒரு நடைமுறையாகவே இருக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, எமது பண்பாட்டில் இவ்வாறு ஒருவரிடமிருந்து மற்றவர் சற்று விலகியிருந்தபடி கருமமாற்றுவது என்பது இல்லவே இல்லை. ஆசிரியரைச் சுற்றியபடி காணப்படும் முன்பள்ளி மாணவர்கள், முண்டியடித்தபடி பாடசாலை வாசலை விட்டு வெளியேறும் உயர்வகுப்பு மாணவர்கள், ஒருவரின் தோளோடு தோள் நின்றபடி வழிபடும் ஆலய மரபுகள், தோளுக்கு மேலால் நடைமுறைப்படுத்தப்படும் பணப்பரிவர்த்தனைகள் மற்றும் சிறுகடை வியாபாரங்கள், பொதுப் போக்குவரத்துகள், வைத்தியசாலை நடைமுறைகள், வரிசையில் நிற்க வேண்டிய நிலைமைகள், விழாக்கள், கொண்டாட்டங்கள், நன்மை தீமைகள் என எமது பண்பாட்டில் எந்த ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒருவருக்கும் மற்றவருக்கும் இடையே போதியளவு இடைவெளியைப் பேணுதல் என்பது ஒருபோதும் இருக்கவில்லை. எனவே. திடீரென்று இவ்வாறு இடைவெளியைப் பேணுவது என்பது மிகவும் சவால் நிறைந்ததாக இருக்கின்றது.

மேலும், இவ்வாறு போதியளவு இடைவெளியைப் பேணிக்கொண்டு கருமங்களை ஆற்றுவதற்குரிய வெளி (space) உண்மையாகவே பல இடங்களில் இல்லை என்பதே நடைமுறை யதார்த்தமாக இருக்கின்றது. உதாரணமாக, நம்மிடையே இருக்கின்ற பல கட்டிட அமைப்புகள் ஆட்களுக்கிடையே தேவைப்படுகின்ற குறைந்தளவு இடைவெளியைத்தானும் கணக்கிலெடுக்காமலே கட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால், இக்கட்டிடங்களுக்குள்ளே வழங்கப்படுகின்ற சேவைகளானவை அதிக அளவினதான சேவைபெறுநர்களை இலக்கு வைத்து வழங்கப்படுகின்றன. பாடசாலைகள், பஸ்தரிப்பிடங்கள், அலுவலகங்கள், ஆலயங்கள், வைத்தியசாலைகள், கடை கண்ணிகள், சந்தைகள் என மனதில் எழுகின்ற அத்தனை உதாரணங்களிலும் இடப்பற்றாக்குறையும், நெருக்கியடித்தபடி இருக்கும் சூழலுமே காட்சிப் படிமங்களாகின்றன. பௌதிக இடைவெளியைப் பேணுவதற்கான இன்னுமொரு சவால் எமது வீடுகளில் இருக்கின்றது. உண்மையில், சாதாரண நேரங்களில்கூட வீடுகளில் போதியளவு பௌதிக இடைவெளியைப் பேணுவது ஆரோக்கியமானது. அது குறிப்பாக, தற்போதைய கொவிட்19 தொற்றுச் சூழலில் மிகவும் முக்கியமானதாகின்றது. வீடுகளில் இருந்து வெளியே சென்று வருவோர், அல்லது வீடுகளுக்கு ஏதாவது தேவைகளுக்கு என வருவோர் வீட்டில் இருக்கும் ஏனையவர்களுக்கு, குறிப்பாக வீடுகளில் இருக்கும் முதியவர்கள், நோயாளிகள் மற்றும் சிறுவர்களுக்கு, தொற்றுகளைக் கொடுத்துவிடாமல் இருப்பதற்கு நாம் மேலே பார்த்த சுகாதாரப் பழக்க வழக்கங்களும், ஆட்களுக்கிடையிலான பௌதிக இடைவெளியைப் பேணுதலும் முக்கியமானது. இவ்வாறு ஆட்களுக்கிடையே போதிய இடைவெளியைப் பேணுவது என்பது பல சவால்கள் நிறைந்த ஒரு விடயமாகவே இருக்கின்து. அது அவ்வாறு இருந்தாலும், நாம் அதனை முடியுமானளவு கடைப்பிடித்தே ஆக வேண்டும். நாம் தொடர்ந்தும் வாழ வேண்டுமென்றால், எமது சந்ததியும் சமூகமும் தொடர்ந்து தழைக்க வேண்டுமென்றால் இப்பொழுது நாம் அதனைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக நான் பணிபுரியும் இடங்கள், ஊடாடும் சமூக சூழல்கள், போய்வரும் வழிகளில் காணுகின்ற காட்சிகள் யாவும் ஆட்களுக்கிடையிலான பௌதிக இடைவெளியைப் பேணுதல் என்பது எவ்வளவு சவால்கள் நிறைந்தவை என்பதைக் காட்டி நின்றன. ஆயினும், மறுதலையாக, நடைமுறைச் சாத்தியமான பல தீர்வுகளையும் இந்த அவதானிப்புகள் தந்து நின்றன. காலத்தின் தேவையானது எமது நடத்தைக் கோலங்களில் மாற்றங்களை உருவாக்குகின்றன என்பதனையும் என்னால் உணரமுடிந்தது. உதாரணமாக, நாம் ஒரு சேவையைப் பெறுகின்ற பொழுது, இடைவெளி விட்டபடி வரிசையில் நிற்றல் என்பது இப்பொழுது மெல்ல மெல்ல நடைமுறைகக வருகின்றது. கொவிட்1 வைரஸ் தொற்றுப் பரவாமல் இருப்பதற்கு இந்த இடைவெளி இன்னமும் சிறிது கூடுதலாக இருக்க வேண்டும். அதை நாம் விரைவில் பழகிக் கொள்வோம்.

பௌதிக இடைவெளியைப் பேணிக் கொண்டு சேவைகளைப் பெறுகின்ற பொழுது, உதாரணமாக ஒரு வைத்தியரைக் காணும் பொழுது, நாம் உரத்துக் கதைக்க வேண்டியிருக்கின்றது. எம்மைப் பார்த்துப் பின்பு வைத்தியர் உரத்துக் கதைக்க வேண்டியிருக்கின்றது. பின்பு, அந்தச் சத்தங்களுக்கு மேலாக அடுத்தவர் கதைக்க வேண்டியிருக்கின்றது. இவ்வாறு எமது சூழல் சத்தங்கள் நிறைந்த சூழலாக மாறிவிடுகின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு நாம் எல்லோரும் மிகவும் மெதுவாகக் கதைக்க ஆரம்பித்தோமானால், ஒருவரை ஒருவர் உன்னிப்பாக அவதானிப்பதுவும், விடயங்களைச் சரியாகக் கிரகித்துக் கொள்வதுவும் சுலபமாகிவிடும். அப்படிச் செய்கின்ற பொழுது நாமும் மிகுந்த மன அமைதியோடும், புத்துணர்ச்சியோடும் காரியங்களை ஆற்றக் கூடியதாக இருக்கும்.

இந்தக் காலப்பகுதி இன்னுமொரு விடயத்தையும் எமக்குக் கற்றுத் தருகிறது. ஆட்களுக்கடையே பௌதிக இடைவெளியைப் பேண வேண்டிய சிரமங்களே இல்லாத ஒருமுறை இருக்கின்றது. அது, ஒருவரை ஒருவர் இயலுமானளவு நேரடியாகக் காணுவதனைத் தவிர்த்துக் கொள்ளுதல் ஆகும். இன்றைய தொலைத்தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சியும், இணைய வழி இடம்பெறும் மெய்நிகர் (virtual) அலுவலகப் பண்பாடும், கல்விச் செயற்பாடுகளும், உண்மையில் ஆட்களை ஆட்கள் சந்திக்க வேண்டிய தேவைகளைக் குறைத்து விடுகின்றன. பழமைக்கும் புதுமைக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்த நாம் தொழில்நுட்பங்கள் ஏற்படுத்தியிருக்கும் இந்த வசதிகளை இலகுவாகக் கற்று நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு வாய்ப்பை இந்த மோசமான தொற்றுநோய்ச் சூழல் எமக்குத் தந்திருக்கின்றது. இதனை நாம் சரியாக உபயோகித்தோமானால் எமது சமுதாயத்தை அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி நகர்த்த முடியும்.

வீடுகளில் இவ்வாறு தனியாட்களுக்கிடையிலான இடைவெளியைப் பேணுவது என்பது உண்மையில் மிக அதிக சவால்கள் நிறைந்தவையாகவே இருக்கின்றது. எமது குடும்ப அமைப்பு மற்றும் குடும்ப இயக்கம் என்பன பௌதிக இடைவெளியோடிருத்தல் என்பதனைக் கேள்விக்குறியாக்குகின்றன. ஆயினும், நாம் கவனமாக இருக்க வேண்டும். இன்று கொவிட்19 தொற்றினால் பாதிக்கப்பட்ட பலர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும்.

இந்தவாறு இந்தத் தொற்றுநோய்க் காலத்தில் ஆட்களுக்கிடையே பௌதிக இடைவெளியைப் பேணப் பழகுவது என்பது நாம் ஒவ்வொருவரும் எமக்குத் தேவைப்படும் தனிப்பட்ட வெளியைப் (personal space) புரிந்து கொள்வதற்கும், மற்றவர்களுடைய தனிப்பட்ட வெளியை மதிக்கக் கற்றுக்கொள்வதற்குமான வாய்ப்புகளையும் தருகின்றது. அத்துடன், நாம் இதுவரை காலம் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்த சில விழுமியங்கள் மீதான தீர்க்கமான மாற்றங்களுக்கும் இது வாய்ப்பளிக்கின்றது. மிகவும் முக்கியமாக கணினித் தொழில்நுட்பமும், இணையப் பயன்பாடும் எவ்வாறு எமது நாளாந்தச் செயற்பாடுகளுக்கு உதவுகின்றன என்பதனைக் கற்றுக் கொள்வதற்கான ஒரு பெருவாய்ப்பை இந்த இடர்காலம் வழங்கியிருக்கின்றது.

இறுதியாக ஒரு விடயம். ஆட்களுக்கிடையே இடைவெளியைப் பேணுதல் என்பது அதனது பௌதிகத் தன்மையை மட்டுமே குறித்து நிற்கின்றது. நாம் எல்லோரும் மனதளவில் இணைந்திருக்க வேண்டியது முக்கியமானது. இந்த மனதளவில் இணைந்திருக்கும் பழக்கம் என்பது மிகவும் இரசனைக்குரியது. உடலளவில் தள்ளியிருந்தபடி மனதளவில் இணைந்திருப்பது என்பது உண்மையில் ஒரு நல்ல பயிற்சியும் கூட. இது ஒருவர் மீது மற்றவருக்கு இருக்கின்ற அன்பு, அக்கறை, பரிவு மற்றும் புரிந்துணர்வு மீதான கூருணர்வை அதிகரிக்கின்றது. தயவுகூர்ந்து நாம் எல்லோரும் மனதளவில் இணைந்திருப்போம். அது இப்பொழுது மிகவும் தேவைப்படுகின்றது. அது எமது ஆரோக்கியத்தை அதிகரிக்கும். ஆறுதல் தரும். பலத்தைத் தரும். பயன் தரும்.

# உலக வல்லரசு அந்தஸ்தை இழக்கின்றதா அமெரிக்கா?

வொஷிங்டன், ஏப். 6
கொரோனா வைரஸால் கற்பனைக்கும் எட்டாத பின்னடைவைச் சந்தித்துள்ள அமெரிக்கா, உலக வல்லரசு என்ற அந்தஸ்தை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அமெரிக்கா 75 ஆண்டுகளுக்கு முன்னைய பொருளாதார நிலைக்குத் தள்ளப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.
சீனாவின் வுகான் மாநகரில் தோற்றம்பெற்ற கொரோனா பெருந்தொற்று அமெரிக்காவில் உச்சம் தொட்டுள்ளது. அங்கு சுமார் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு நாளுக்கு ஆயிரம் பேர் என்ற அடிப்படையில் உயிரிழப்புக்கள் சம்பவிக்கின்றன. அமெரிக்கா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பெரும் வர்த்தக நகரான நியூயோர்க் நகரம் முழுவதுமாக முடக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே அமெரிக்காவுக்குப் பெரும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உலகின் பெரும் பொருளாதார ஆய்வு நிறுவனமான 'மோர்கன் ஸ்ரான்லி' அமெரிக்கா குறித்து தெரிவித்தது வருமாறு:
1946ஆம் ஆண்டு பொருளாதார நிலை எப்படி இருந்ததோ, அந்த நிலைக்கு அமெரிக்கா சென்றுவிடும்.
அதாவது சுமார் 75 ஆண்டுகளுக்கு முந்தைய பொருளாதார நிலைக்கு அமெரிக்கா சென்றுவிடும். தற்போதைய காலாண்டில் பொருளாதார வளர்ச்சி 3.4 சதவீதமாக சரியலாம். அடுத்த ஜூன் மாத காலாண்டில் 38 சதவீதம் சரியலாம். ஒட்டுமொத்தமாக 2020ஆம் ஆண்டில் 5.5 சதவீதம் பொருளாதார சரிவு ஏற்படும் என்று எச்சரித்துள்ளது அந்த நிறுவனம். (ம)



## பாதிப்பு 1,250,000 உயிரிழப்பு 68,000

வுகான், ஏப். 6
கொரோனா வைரஸால் உலக அளவில் நேற்று நள்ளிரவு 12 மணிவரை 12 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 68 ஆயிரம் மக்கள் உயிரிழந்தனர்.
சீனாவின் வுகான் நகரில் கடந்த வருடம் இறுதிப் பகுதியில் கொரோனா அவதானிக்கப்பட்டது. எனினும் சீனாவை விட அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகள் இந்த வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்று நள்ளிரவு 12 மணி வரையிலான நிலவரத்தின்படி உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 12 லட்சத்து 50 ஆயிரமாக உள்ளது. சுமார் 68 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். (ம)



## அமெரிக்காவில் அழுகை பீறிடும் ட்ரம்ப், பென்ஸ் கூட்டாக கருத்து

வொஷிங்டன், ஏப். 6
கொரோனா வைரஸால் அமெரிக்கா பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த இரண்டு வாரங்களுக்கு உயிரிழப்பு மோசமாக இருக்கும் என்று எச்சரித்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
கொரோனா வைரஸ் தொடர்பில் அமெரிக்க மக்களுக்கு விடுத்த அறிவிப்பில் ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:
"அமெரிக்க மக்களுக்கு அடுத்த இரு வாரங்கள் மிகமிக மோசமானதாக இருக்கப்போகிறது. கொரோனா வைரஸால் ஏராளமான உயிரிழப்புகள் நேரிடலாம். இதுநாள் வரை அதுபோன்ற சூழலை நாடு பார்த்திராததாக இருக்கும். துரதிஷ்டமாக அந்த சூழலை எதிர்கொண்டு வருகிறோம், பல உயிர்களை இழந்திருக்கிறோம். ஆனால், வரும் வாரங்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு மாற்றுவோம். அடுத்த இரு மாதங்களில் அமெரிக்காவில் கொரோனா வைரஸால் ஒரு லட்சம் முதல் 2 லட்சம் வரை மக்கள் உயிரிழக்கக் கூடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த உயிரிழப்புகளின் எண்ணிக்கையை நாங்கள் குறைக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். ஆனால் துரதிர்ஷ்டமாக அது போன்ற சூழலுக்குள் நாம் நுழைந்துவிட்டோம், மோசமான உயிரிழப்புகள் இருக்கப் போகிறது, அந்த சூழல் நல்லதாக அமையாது. இதுபோன்ற உயிரிழப்புகளை நான் இதற்கு முன் பார்த்தது இல்லை என்று உண்மையாக நம்புகிறேன். முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் ஆகியவற்றில் இதுபோன்ற உயிரிழப்புகள் இருந்திருக்கலாம். ஆனால், இது எம் அனைவருக்குமான போர்க்காலமாக இருப்பது மோசமானதாகும்"– என்றார். துணை அதிபர் பென்ஸ் நிருபர்களிடம் கூறுகையில், "அமெரிக்காவில் தொடர்ந்து மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து வருகிறோம், அதிகரித்து வருகிறோம். எனினும் அடுத்துவரும் வாரங்கள் மக்களுக்கு மோசமானதாக இருக்கப்போகிறது. அமெரிக்கா முழுவதும் மருத்துவப் பரிசோதனைகள் செய்யும் போதுதான் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்த சூழலைத் தவிர்க்க மக்கள் தீவிரமாக சமூக விலகலைக் கடைபிடிக்க வேண்டும், வீட்டுக்குள்ளயே இருக்க வேண்டியது அவசியம். அடுத்துவரும் நாட்களில் நியூயோர்க் நகரம் மிகப்பெரிய உயிரிழப்புகளைச் சந்திக்கும் எனக் கணித்துள்ளோம், அதன்பின் குறையத் தொடங்கும்" - என்றார். (ம)

## 2லட்சம் முகக்கவசங்களை திருடிவிட்டதா அமெரிக்கா?

### ஜேர்மனி பரபரப்புக் குற்றச்சாட்டு

பெர்லின், ஏப். 6
சீனாவில் இருந்து தாய்லாந்து வழியாக தமக்கு வரவேண்டிய 2 லட்சம் முகக் கவசங்களை அமெரிக்கா திருடிவிட்டது என்று ஜேர்மனி பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.
வுகான் நகரில் தோற்றம்பெற்ற கொரோனா உலகின் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் தற்போது பரவியுள்ளது. கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அங்கு சுமார் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாளுக்குத் தலா ஆயிரம் என்ற அடிப்படையில் அமெரிக்காவில் உயிரிழப்பும் பதிவாகிக் கொண்டு இருக்கின்றது.
ஜேர்மனியும் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் மருத்துவ உபகரணங்கள் அவசியமாகத் தேவைப்படுகின்றன.
இந்த நிலையிலேயே சீனாவில் இருந்து தமக்கு வரவேண்டிய 2 லட்சம் முகக் கவசங்களை அமெரிக்கா திருடி விட்டது என்று குற்றஞ்சாட்டியுள்ளது ஜேர்மனி. (ம)

## பிரான்ஸில் அரசுக்கு எதிராக செவிலியர்கள் நிர்வாணப் போர்

பாரிஸ், ஏப். 6
பிரான்ஸ் அரசுக்கு எதிராக செவிலியர்கள் நிர்வாணப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.
'கொரோனாவுக்கு எதிராக நிர்வாணமாக' என்ற ஹேஸ்டேக்கைப் பயன்படுத்தி அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
தமது போராட்டம் தொடர்பில் செவிலியர் ஒருவர் சர்வதேச ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:
'கொரோனாவுக்கு எதிரான போராட்டத்துக்காக அரசு எங்களை நிர்வாணமாக அனுப்புகின்றது. ஆம், உரிய மருத்துவ வசதிகள் இல்லாமல் நோயாளர்களை எதிர்கொள்ள அனுப்புவதும் ஒருவகை நிர்வாணம்தான். இதனால்தான் அரசின் இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து நிர்வாணப் போராட்டத்தை நடத்தி வருகின்றோம்' என்றார். (ம)



# வல்லுநர்களின் பரிந்துரைப்படியே இனி முடிவுகள் எடுக்கப்படும்

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிப்பு


கொழும்பு, ஏப். 6

**கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த சுகாதார மருத்துவ, பாதுகாப்பு மற்றும் சட்டம் ஆகிய துறைசார் வல்லுநர்களின் பரிந்துரைகளுக்கு அமையவே முடிவுகள் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.**

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசு முன்னெடுத்துள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பிலும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராயும் நோக்கில் ஜனாதிபதி தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டை ,நிலைமை சீரடையும் வரையில் சிறப்பாகவும், நேர்த்தியாகவும் முன்னெடுப்பதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட் டது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான வர்கள் மற்றும் தொற்றுக்குள்ளாகி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவோர், அவர்கள் நெருங்கிப் பழகியவர்கள் ஆகியோரை மீண்டும் மீண்டும் கடுமையான பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (த)



# 4 கிலோ கஞ்சா மீட்பு

## சந்தேகநபர்கள் தப்பியோட்டம்

புதுக்குடியிருப்பு சாலை கடல் நீர் ஏரி ஊடாக, கடத்தப்பட்ட கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. எனினும் சந்தேக நபர்கள் தப்பி ஓடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சாலை கடல் நீர் ஏரி ஊடாக, படகில் புதுக்குடியிருப்புக்கு கஞ்சா கடத்தப்படுவதாக கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து, புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் நேற்று இரவு கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது படகொன்று சாலை கடல் நீர் ஏரி வழியாக வருவதை அவதானித்தனர். படகில் வந்த சந்தேகநபர்களைப் பொலிஸார், துரத்திச் சென்றவேளை, அவர்கள் படகையும், கொண்டு வந்த கேரளா கஞ்சாவையும் விட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.

படகில் இருந்த 4 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபர்களைத் தேடி வருவதாகவும், கஞ்சாவை நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (க-19)

# நாடாளுமன்றைக் கூட்டும் அவசியம் தற்போதில்லை

## யாப்பா அபேவர்த்தன தெரிவிப்பு

கொரோனா வைரஸ் ஒழிப்புக்காக நாடாளுமன்றைக் கூட்டுவதற்கான அவசியம் கிடையாது. அனைத்துத் தரப்பினரும் அரசின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினால்போதும். நிலைமையை வெற்றிகொள்ள முடியும்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

"கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அரசாங்கம் பல முன்னேற்றகரமான திட்டங்களை செயற்படுத்துகின்றது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் நாடாளுமன்றத்தை கூட்டுமாறு குறிப்பிடப்படுகின்றது. நாடாளுமன்றத்தை கூட்டுவதால் எவ்வித பயனும் ஏற்படாது. வீண் காலதாமதமே ஏற்படும். நாடாளுமன்றத்தைக் கூட்டி அரச மற்றும் பொது நிர்வாகத்துக்கு நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் கிடையாது. நிதி தொடர்பான அதிகாரம் ஜனாதிபதிக்கு அரசியலமைப்பின் ஊடாக கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகவே நிதி தொடர்பாக எவ்வித நெருக்கடியும் ஏற்படாது. தற்போதைய நெருக்கடியான நிலையில் ஒரு தரப்பினர் இனவாத, மதவாதக் கருத்துக்களை குறிப்பிட்டு மாறுப்பட்ட பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள். தேவையற்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்காமல் ஒன்றிணைந்து செயற்பட்டால் தற்போதைய நிலையை வெற்றி கொள்ள முடியும்- "என்றார். (த)

# இன்று மருந்தகங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளபோதும், இன்று திங்கட்கிழமை மருந்தகங்கள் திறக்கப்படவுள்ளன. ஓய்வூதியம் பெறுவோருக்கான மருந்து கொள்வனவுக்காகவே, இவ்வாறு மருந்தகங்கள் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் திகதியும், மூன்றாம் திகதியும் இதே காரணத்துக்காக மருந்தகங்கள் திறக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# முருங்கனில் தயாராகின்றன 6,000 மரக்கறி நாற்றுக்கள்

யாழ்ப்பாணம், ஏப். 6

விவசாயத் திணைக்களத்தின் விதைகள் நடுகைப் பொருள்கள் நிறுவனத்தின் (SPMDC) முருங்கன் பண்ணையில், 6 ஆயிரம் மரக்கறி நாற்றுக்கள் விநியோகம் செய்வதற்கு தற்போது தயார் படுத்தப்பட்டு வருகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை அடுத்து ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளது.

இந்த நிலையைப் பயனுள்ளதாக மாற்றுவதற்கு வீட்டுத் தோட்டம் செய்யுமாறு அரசு பணித்துள்ளது. இதற்கு அமைவாக வீட்டுத் தோட்டம் செய்வதற்கான நாற்றுக்களை வழங்குவதற்கு நாற்றுகள் சாடியில் நடப்பட்டு வருகின்றன. நாற்றுச் சாடிகள் உற்பத்தி செய்து கமநல சேவைகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-7)





மட்டக்களப்பு, செங்கலடி களுவன்கேணி பிரதேசத்தில் கொரோனா தொற்றுத் தொடர்பான சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ள குடும்பங்களுக்கு, வாழ்வாதார உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் விரிவுரையாளர்களின் எற்பாட்டில் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரியின் ஊடாக 51 குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ந)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 30 ஆயிரம் ரூபா கடன்

## சேமிப்பு வங்கி நடவடிக்கை



கொழும்பு, ஏப்.6

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கடன் வழங்க இலங்கை சேமிப்பு வங்கி முன்வந்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடு பூராகவும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள சுமார் 50 ஆயிரம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு, உதவும் வகையில் சேமிப்பு வங்கி 30 ஆயிரம் ரூபாவை கடனாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை முன்பள்ளி ஆசிரியர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசங்க ஸ்ரீநாத் மற்றும் சேமிப்பு வங்கியின் தலைவர் திருமதி கேசிலா ஜயவர்தன ஆகியோர் இதுதொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர். (ந)

# கடலுணவு உற்பத்தி மன்னாரில் படுவீழ்ச்சி

## மீனவ அமைப்புக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6

மன்னார் மாவட்டத்தில் நாளாந்தம் 60 ஆயிரம் தொடக்கம் 65 ஆயிரம் கிலோ கடலுணவு உற்பத்திகள் பெறப்பட்ட நிலையில் கொரோனா தாக்கத்தால் தற்போது 10 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் கிலோ உற்பத்தியே கிடைப்பதாக மீனவ அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதனால் கடற்றொழிலாளர்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர்.

இதேநேரம், மன்னார் மாவட்டத்தில் மட்டும் 37 கரைவலைப் பாடுகள் உள்ள நிலையில், இதன் மூலம் தினமும் 10 ஆயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட உற்பத்திகள் பெறப்பட்டு வந்தன. ஆனால் தற்போது கரைவலைப் பாடு எவையுமே இடம்பெறவில்லை. இதனால் அதில் தொழில் வாய்ப்பைப் பெற்ற அத்தனை தொழிலாளர்களும் தொழிலை இழந்துள்ளனர் என்றும் மீனவ அமைப்புக்கள் தெரிவித்தன. (த-105)

# ஊரடங்கு வேளையில் மதுவிற்றவர் கைது

திருகோணமலை, மொரவெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறி மதுபான விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுச் சனிக்கிழமை திருகோணமலை, மொரவெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குறித்த நபரைக் கைது செய்துள்ளதாக, மொரவெளப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பன்குளம் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்ற வேளையில் வீட்டில் மறைத்து வைத்து மதுபானப் போத்தல்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து அங்கு விரைந்த பொலிஸார், 9 மதுபான போத்தல்களைக் கைப்பற்றி, மேற்படி நபரைக் கைதுசெய்துள்ளனர் என மேலும் தெரிவித்தனர். (ந)

# சமுர்த்தி வழங்குவதில் முல்லையில் பாகுபாடா?

## மக்கள் குற்றச்சாட்டு பணிப்பாளர் விளக்கம்

முல்லைத்தீவு, ஏப்.6

சமுர்த்திப் பயனாளிகளுக்கான விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதும், அந்தத் திட்டங்களில் பாகுபாடு காட்டப்படுகின்றது என்று முல்லைத்தீவு மாவட்டச் சமுர்த்திப் பயனாளிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

2013ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. எனினும் கடந்த ஆண்டு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும் பயனாளிகள் குற்றம் சுமத்துகின்றனர். “குறித்த சிலருக்கு மாத்திரம் சமுர்த்தி நிதி வழங்குகின்றனர். இது அதிகாரிகள் பாகுபாடாக நடக்கின்றனர் என்பதைக் காட்டுகின்றது ”என்றும் கூறுகின்றனர்.

இது பற்றி முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் திருமதி ஜெயபவானி கணேசமூர்த்தியிடம் கேட்டபோது, “புதியவர்கள், பழையவர்கள் என்ற வித்தியாசமின்றி முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து பயனாளிகளுக்கும் 10ஆயிரம் ரூபா வெவ்வேறு திட்டங்களூடாக வழங்கப்படுகின்றது” என்று தெரிவித்தார்.

“முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது 10ஆயிரத்து 959 குடும்பங்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு கட்டாயச்சேமிப்பு 80 வீதம் உள்ளவர்களுக்கும் சஹன பியவர சலுகைக் கடன் வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 5 ஆயிரம் ரூபா வழங்கும் நடவடிக்கை பத்து சமுர்த்தி வங்கிகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது எமது உத்தியோகத்தர்கள் ஊடாக வீடுவீடாகச் சென்று வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கு மேலதிகமாக 2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் எமக்கு கிடைக்கப்பெற்ற 13ஆயிரத்து 435 குடும்பங்களுக்கு நிவாரணங்களும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கான பத்தாயிரம் ரூபாவில் அருணலு வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் ஊடாக முதல்கட்டமாக 5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

மொத்தமாக 24ஆயிரத்து 394 குடும்பங்களுக்கும் இந்த பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். பத்தாம் திகதியிலிருந்து இரண்டாம் கட்டமாக 5ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. நமது அலுவலர்கள் இரவு பகல் பாராது கடமையாற்றி வருகின்ற நிலையில் அவர்களுக்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்” என்று மேலும் தெரிவித்தார். (த-19)

# வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு உதவி

*கைதடி இந்து வாலிபர் சங்கம் வழங்கியது*

யாழ்ப்பாணம், ஏப்.6

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கத்தின் சமூகநலன் திட்டத்தின்கீழ் கைதடியில் மிக வறுமை நிலையிலுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

அரிசி, கோதுமை மா, சீனி, சோயா, பருப்பு, மரக்கறிகள் ஆகிய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. அதன்படி, கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தடி, இராசபுரி, கள்ளிக்காடு, குமரநகர், உதயசூரியன், வலந்தலை, உவரி, தட்டான்கலட்டி, ஊரியான், நேவத்தை, கல்லாகம், பாரதி சனசமூக நிலையம், கைதடி வடக்கு, துர்க்கா சனசமூக நிலையம், பண்டகவயல், கைதடி கிழக்கு ஆகிய பிரதேசங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பிரதேச மக்களுக்கான நிவாரணங்கள் இன்னும் தேவையாகவுள்ளன என்றும் இந்து வாலிபர் சங்கம் தெரிவித்தது. (த)



# இறை நம்பிக்கையுடன் சகலரும் வாழ்வோம்

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

மன்னார், ஏப்.6

கொரோனா வைரஸால் அச்சுறுத்தப்பட்டாலும் பல சவால்களை எதிர்கொண்டாலும் இறை நம்பிக்கையுடன் வாழ்வோம் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ தெரிவித்தார்.

கிறிஸ்தவர்களின் தவக்கால வாரம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் காலை 7 மணியளவில் குருத்தோலை ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதில் மறையுரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எங்கள் கண்ணுக்கு தெரியாத கொரோனா வைரஸ் உலகத்தை வாட்டி வதைக்கின்றது. இந்தக்காலகட்டத்தில் நாங்கள் என்ன வகையில் யேசுவின் திருப்பாடுகள், வேதனைகள், சிலுவை மரணத்தைப் பற்றி தியானித்து அவரோடு இணையலாம் என்று மேலும் தெரிவித்தார். (த-56)

# திருமலையில் பெற்ற தாயை கொலை செய்த கொடூர மகன்

திருகோணமலை, ஏப்.6

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தனவெட்டை பகுதி, சந்தனவெட்டை வீதியில் நேற்றிரவு மகனின் தாக்குதலில் தாய் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த பெண், சம்பூர், சீதனவெளி பகுதியைச் சேர்ந்த இராசையா சரோஜாதேவி (வயது-57) எனவும் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருதாவது:

பெண்ணும் அவரது மகன், மருமகள் ஆகியோர் சீதனவெளி பகுதியில் வசித்து வந்த நிலையில், மகனுக்கும் மருமகளுக்கும் இடையில் குடும்பத்தகராறு ஏற்பட்டிருந்தது.

மருமகள், சந்தனவெட்டை, 64ஆம் கட்டையிலுள்ள அவரது தாயாரின் வீட்டுக்குச் சென்றிருந்த நிலையில் அங்கும் கணவன், மனைவி இருவருக்கும் இடையில் மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தாயார் இது தொடர்பாக விசாரிப்பதற்காக வீதியால் சென்று கொண்டிருந்தபோது, அவரது மகன் எதிரில் வருகை தந்தார் எனவும், தகராறு தொடர்பில் கேட்டபோது தாயாரை மகன் அங்கேயே அடித்துக் கொலை செய்துள்ளார் எனவும் பொலிஸ் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம், மூதூர் மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உயிரிழப்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்த சம்பூர் பொலிஸார், சம்பவம் தொடர்பில் மகனைக் கைது செய்துள்ளனர். உயிரிழந்திருந்த தாய்க்கு அருகில் தாக்குதல் நடத்திய மகன் உறங்கிக் கொண்டிருந்தார் எனவும் அயலவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். (ஒ.5,22)

## கிளிநொச்சி

# விவசாயிகள் பெரும் பாதிப்பு

கிளிநொச்சி,ஏப்.6

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் உற்பத்தி, சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விலைநிர்ணயம் செய்தல் போன்ற பொறிமுறைகள் ஒரு கட்டமைப்பின் கீழ் இயங்காமையால், விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதில் அசமந்தப்போக்கில் இருப்பதாலும், பெருமளவு நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கு அரச மானியம் மற்றும் களஞ்சிய வசதி போதியளவு காணப்படாமையால் விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை தென்னிலங்கை அரிசி ஆலைகள் தற்போது கிளிநொச்சி விவசாயிகளிடமிருந்து அதிக விலையில் நெல்லைக் கொள்வனவு செய்துவருகின்றன.

கிளிநொச்சியில் எத்தனையோ அரிசி ஆலைகளின் அரிசி வகைகள், சந்தையில் காணப்பட்டாலும், சதொச, கார்கில்ஸ் போன்ற நிறுவனங்களில், தென்னிலங்கை உற்பத்தி நிறுவனங்களின் அரிசிகளை முண்டியடித்து வாங்கிச் செல்வதையும் அவதானிக்க முடிந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் இடையேயான புரிந்துணர்வு கட்டமைப்பு ஒன்று கட்டமைக்கப்படவில்லை என்றால், எமது நெல்லைக் கொண்டு உற்பத்தியாகும் அரிசியை நாமே அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தவிர்க்க முடியாது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (க-222)

# தொலைக்காட்சி மூலம் கல்வி

யாழ்ப்பாணம்,ஏப்.6

கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கு அமைவாக, நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் தரம் 6,11 வரையான வகுப்புகளுக்கான பாடத்திட்டங்களை, தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நேத்ரா தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்புக்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன. பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இது தொடர்பில் உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தொடர்ச்சியான மேலதிக தகவல்கள் உரிய நேரத்தில் வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (க-159)

# வெளிமாவட்டத்தில் இருந்து யாழில் தங்கியுள்ளோருக்கு!

தெல்லிப்பழை, ஏப். 6
வெளி மாவட்டங்களிலி ருந்து வருகை தந்து தெல் லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளோ ருக்கு பிரதேச செயலகத் தால் அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.
"தற்போது நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு ஊரடங்குச் சட் டத்தை நடைமுறைப்படுத் தியுள்ளது. வெளி மாவட் டங்களை நிரந்தர வதிவிட மாகக் கொண்டு யாழ்ப் பாண மாவட்டத்துக்கு கட மையின் நிமித்தம் மற்றும் வேறு தேவையின் நிமித் தம் வருகை தந்து தற்கா லிகமாகத் தங்கியுள்ளவர் களில் யாராவது, மீண்டும் தமது நிரந்தர வதிவிடங்க ளுக்குச் செல்வதற்குத் தேவையேற்பட்டால் அவர் கள் தற்சமயம் வதிவிட மாக கொண்ட கிராம அலு வலரை தொடர்பு கொள்ள வும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (த-114)

# கொரோனாப் பெண்ணின் சிசுவுக்கு தொற்று இல்லை

கொழும்பு,ஏப்.6
பேருவளை பன்னிலப் பிரதே சத்தைச் சேர்ந்த கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பெண் பிரசவித்த சிசுவுக்கு, தொற்று ஏற்படவில்லை என்று பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் வருண செனவிரத்ன தெரிவித்துள்ளார்.
நாகொட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை சிசு வைப் பிரசவித்த பின்னரே, குறித்த பெண்ணுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள் ளமை கண்டறியப்பட்டது.
இதையடுத்து சிசுவின் இரத்த மாதிரி பரிசோதனைக்காக கொழும்பு தேசிய வைத்தியசா லைக்கு அனுப்பப்பட்டது. இதன்போது சிசுவுக்கு கொரோ னாத் தொற்று ஏற்படவில்லை என்று வைத்திய பரிசோதனை கள் மூலம் தெரியவந்துள்ளது.
இதேவேளை, சிசுவின் தாய் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை யின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-22)

# யாழ்ப்பாணத்தில் வங்கிச் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.6
ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள பகுதிகளில் தேசிய சேமிப்பு வங்கி காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணி வரையும், ஊரடங்குச் சட்டம் நடை முறையில் இல்லாத அல்லது தளர்த்தப்ப டும் இடங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் ஒருமணி வரையும் வாடிக்கையாளர் சேவையை வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தவிர நடமாடும் சேவையும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இன்று திங்கட்கிழமை கச்சாய் கொடிகா மம் வீதி, நல்லூர் பருத்தித்துறை வீதி, நாளை செவ்வாய்க்கிழமை பொன் னாலை வீதி சுழிபுரம், 8 ஆம் திகதி பிர தான வீதி காரைநகர், மருத்துவமனை வீதி ஊர்காவற்றுறை, 9 ஆம் திகதி கொக் குவில், கோண்டாவில், இணுவில்,சுன்னா கம்,10 ஆம் திகதி ஆடியபாதம் வீதி திரு நெல்வேலி,பலாலி வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றில் நடமாடும் சேவை நடை பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

# வடக்கே வரும் பொருள்கள் இனி இறங்கும் விலைகள்!

யாழ்ப்பாணம், ஏப்.6

**கொரோனாத் தொற்று நோய் காரணமாக வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பொருள்களின் அதிகூடிய விலையேற்றத்தைத் தடுக்க வடக்கின் 5 மாவட்டங்களுக்கும்,அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுரப்படவுள்ளன. இது தொடர்பில் அந்தந்த மாவட்டச் செயலர்க ளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஒரு கிலோ சீனி 117 ரூபா விலையில், ஒரு லட்சத்து 55 ஆயிரம் கிலோ சீனி யும், ஒரு கிலோ வெங்காயம் 160 ரூபா வீதம் ஒரு லட்சம் கிலோ வெங்காயமும் , ஒரு ரின் மீன் 100 ரூபா வீதம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரின் மீனும் ,கிலோ 98 ரூபா விலையில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கிலோ அரிசியும் ஐந்து மாவட் டங்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.
இதன் பிரகாரம் உடனடியாக யாழ்ப்பா ணம் மாவட்டத்துக்கு அரிசி 20 ஆயி ரம் கிலோ , சீனி 50 ஆயிரம் கிலோ ,பருப்பு 20 ஆயிரம் கிலோ என்பன எடுத்துவரப்படவுள்ளன. அதேநேரம் உள்ளூர் மீனவர்களின் நன்மை கருதி மீன்ரின் எடுத்து வரப்படவில்லை என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக தகவல் கள் தெரிவிக்கின்றன.
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 50 ஆயி ரம் மீன்ரீன் , 50 ஆயிரம் கிலோ அரிசி , 25 ஆயிரம் கிலோ சீனி , 15 ஆயிரம் கிலோ பருப்பு , பெரிய வெங்காயம் 15 ஆயிரம் கிலோ அனுமதிக்கப்பட்ட நிலையில் அரிசி தவிர்ந்த ஏனைய பொருள்கள் ஏற்றப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.
மன்னார் மாவட்டத்துக்கு 25 ஆயிரம் கிலோ பருப்பு , 25 ஆயிரம் மீன்ரின். 30 ஆயிரம் சீனி, 10 ஆயிரம் கிலோ வெங்காயம் அனுமதிக்கப்பட்ட நிலை யில் தேவை கருதி அரிசி , ரின்மீன் தவிர்த்து சீனி , பருப்பு , வெங்காயம் ஏற்றப்படுகின்றது என்றும், இதே போன்று கிளிநொச்சி மாவட்டத்துக்கும் அனுமதிக்கப்பட்ட பொருள்களில் அரிசி தவிர்ந்த ஏனைய பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன என்றும் தெரிவிக்கப் பட்டது. (ப-105)

# நீர்த்துப் பூசணிகளை திருடியவர் கைது

*இருவர் தலைதெறிக்க ஓட்டம்*

முல்லைத்தீவு, ஏப். 6
ஊரடங்கு நேரத்தில் தோட்டத்தில் 50 நீர்த் துப் பூசணிக்காய்களைத் திருடிச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார். இருவர் தப்பி ஓடியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட தேராவிலில் நேற்றுமுன்தி னம் இரவு இடம்பெற்றது.
ஊரடங்கு நேரத்தில் மக்கள் உணவுக்கும் பணத்துக்கும் என்னசெய்வது என்று தெரி யாத நிலையில் தவித்து வருகின்றனர். விவசாயிகள் உற்பத்திகளை மேற்கொண்டு வந்தாலும் சந்தைப்படுத்தமுடியாத நிலை அல்லது சந்தைப்படுத்துவதில் இழுபறி நிலை காணப்படுகின்றது. இந்தநிலை யில், குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளது.
தோட்டத்துக்குச் சென்ற விவசாயி ஒருவர் தனது உற்பத்திகள் திருடப்பட்டதை அவதா னித்து பொலிஸில் முறையிட்டார். சந்தே கப்படும் நபர் தொடர்பிலும் தகவல் வழங் கியிருந்தனர். அதன்படி சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் சோதனை நடத்தியபோது அங்கு நீர்த்துப் பூசணிக் காய்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை அவதானித்து அந்த வீட்டிலிருந்தவரைக் கைது செய்திருந்தனர்.
விசாரணையில் மூவர் சேர்ந்து அவற்றைத் திருடியிருந்தனர் என்பது தெரியவந்தது. ஏனைய இருவரின் வீடுகளுக்குப் பொலி ஸார் சென்றபோது அவர்கள் வீட்டிலிருந்து தப்பிஓடிவிட்டனர் என்றும், புதுக்குடியிருப் புப் பொலிஸார் அவர்களைத் தேடி வருகின் றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-19)

# குறைந்த விலையில் முல்லையில் படையினரால் மரக்கறிவகைகள்



முல்லைத்தீவு. ஏப்.6
முல்லைத்தீவு மாவட்டதிலுள்ள மக்களுக்குத் தேவையான மரக்கறி வகைகளை படையி னர் மிகக் குறைந்த விலையில் நேற்று வழங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
கொரோனாத் தாக்கம் காரண மாக நாடுமுழுவதும் ஊரடங் குச் சட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள நிலையில், நாளாந்த உணவுக்குத் தேவை யான மரக்கறி வகைகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டிருந் தனர். இந்த நிலையில் தனி யாரால் மக்களுடைய வீடுக ளுக்குச் சென்று மரக்கறி கள் அதிகவிலையில் விற் கப்படுகின்றன என்ற குற்றச் சாட்டுக் கள் கடந்த நாள்க ளில் முன்வைக்கப்பட்டி ருந்தன. இவ்வாறான நிலையி லேயே படையினர் முல்லைத் தீவில் நேற்று குறைந்த விலை யில் மரக்கறிகளை வழங்கியி ருந்தனர். முல்லைத்தீவு மாவட் டத்தின் கட்டளைப் பணியகத் தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு, முள்ளியவளை கிராமத்தில் நடமாடும் நலன்புரிச் சேவை ஊடாக வாகனங்களில் சென்று படையினர் இந்த மரக்கறி களை வழங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-19)



# கலட்டி அம்மன் இளைஞர் கழகத்தால் உதவி வழங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 6
நல்லூர் பிரதேச செயலகத்தால் பரிந்துரைக்கப்பட்ட 135 குடும்பங்களுக்கு, கலட்டி அம்மன் இளைஞர் கழகத்தி னரால் நேற்றுமுன்தினம் அத்தியாவசிய உலர் உணவுகள் அடங்கிய உதவிப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (ஒ,5)

# வவுனியாவுக்கு 48,000 மீன்ரின்கள்

வவுனியா,ஏப்.6
வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலையில் பெற்றுக் கொள் ளும் திட்டத்தின் கீழ், வவுனியா மாவட்டத்துக்கு 48 ஆயிரம் மீன் ரின்கள் நேற்று எடுத்து வரப்பட் டுள்ளன.
வவுனியா மாவட்டத்துக்கு கூட்டுறவு மொத்த விற் பனை நிலையத்தில் இருந்து 48 ஆயிரம் மீன் ரின்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.
ஒரு மீன் ரின் 100 ரூபா விலையில் விற்பனை செய்யப்படும். அதேநேரம் வவுனியா மாவட்டத்துக் கான சீனி மற்றும் பருப்பு இன்று வந்து சேரும் என்று எதிர்பார்ப்பதாக மாவட்டச் செயலக அதிகாரி தெரிவித்தார். (க-105)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.04.2020இல் வெளியிடப்பெற்றது.